விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 04 திங்கட்கிழமை (20.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 275

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## தொகுதி நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் அடங்கிய

# 19-வது திருத்தச்சட்ட மூலம்

# விரைவில் வர இருக்கிறது!

## 13ஆவது அரசியலமைப்பிலும் மாற்றம்

(கொழும்பு)

**18ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் சமர்ப்பிக்கப் பட்டுள்ள நிலையில் 19ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.**

இதன்போது இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக இந்தியாவுடன் இணைந்து கொண்டு வரப்பட்ட 13ஆவது சீர்திருத்தத்தில் மாற்றங்கள் கொண்டு வரப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை இணையத்தள செய்தி ஒன்றின்படி அரசாங்கம் முன்கொண்டு வரவுள்ள அடுத்த சீர்திருத்தத்தின் மூலம் நாடாளுமன்றத்திற்கு 140 பேர் (18ஆம் பக்கம் பார்க்க)

## லக்ஷர் ஈ தொய்பாவுக்கான பயிற்சியில் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பில்லை

(சென்னை)

இந்தியாவின் புனே நகரிலுள்ள பேக்கரியொன்றில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாக வெளியான செய்திகளை மஹாராஷ்டிரா மாநில பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவினர் நிராகரித்துள்ளதாக இந்துப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள ஹிமாயட் பெய்க் என்ற நபர் லக்ஷர் ஈ தொய்பா எனும் தீவிரவாதி இயக்கம் இலங்கையில் பயிற்சி பெற்றதாக தெரிவித்திருந்தார்.

அப் பயிற்சி வழங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளும் (18ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைந்த எனது மகள் குடும்பம் காணாமல் போயுள்ளது!

## ஆணைக்குழு முன் தாய் சாட்சியம்

(கிளிநொச்சி)

ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டுள்ள படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் நேற்று இரண்டாவது நாளாக கிளிநொச்சியில் மக்கள் சாட்சியம் அளித்துள்ளனர். ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்த பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள தனது பிள்ளைகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் காணாமல் போயுள்ளவர்களை கண்டுபிடித்துத்தரவேண்டும் என்றும் கோரினார். (18ஆம் பக்கம் பார்க்க)

## தீர்ப்பை நிராகரிக்க ரணில் கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதிக்கு எதிராக இரண்டாவது இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நிராகரிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

மேற்படி இத் தீர்ப்பு ஜனாதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டால் அது நாடாளுமன்ற உறுப்பினரான சரத் பொன்சேகாவின் சிறப்புரிமைகளை மீறுவதாக அமையும் என ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். (ந-5)

## சரத் பொன்சேகாவுக்கு அநீதியா? ஜெனிவாவில் விசாரணை நடக்கும்

(ஜெனிவா)

அரசினால் சரத் பொன்சேகா எம்.பிக்கு இழைக்கப்பட்டதாகத் கூறப்படும் அநீதிகள், பழிவாங்கல்கள் குறித்து ஜெனிவாவில் உள்ள சர்வதேச நாடாளுமன்றத்தின் மனித உரிமைகள் குழு அடுத்த மாதம் 2ஆம் திகதி விசாரிக்கவுள்ளது.

இவ்விசாரணைக்கு தவறாது ஆஜராக வேண்டும் என்று சர்வதேச நாடாளுமன்றத்தின் மனித உரிமைகள் குழுவின் செயலாளர் பி.ஜோஸ்ஸன், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜயலத் ஜயவர்த்தனவுக்கு அழைப்பு விடுத்துள்ளார். (18ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவில் உரையாற்றும் ஜனாதிபதி நிபுணர் குழுவை சாடமாட்டார்

## அமைச்சர் கெஹலிய அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவுக்கு எதிரான கருத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபை அமர்வில் தமது உரையின் போது வெளிப்படுத்த மாட்டார் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனை தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனை தனியே சந்திக்கும் (18ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் புதிய அரசியல் கட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஜனநாயக மக்கள் கட்சி எனும் புதிய அரசியல் கட்சி ஒன்று ஆரம்பிக்கப் படவுள்ளது.

யாழ்.மாநகரசபை மேயர் பதவிக்காக ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளரும் யாழ்ப்பாண அமைப்பாளருமான எஸ்.சத்யேந்திரா தலைமையிலேயே இந்த கட்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தக் கட்சிக்கான பதிவினை மேற்கொள்வதற்காக (18ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விசாரணையை ஒத்திவைக்குக பான் கீ மூனிடம் இந்தியா கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை தொடர்பான விசாரணைகளை ஒத்தி வைக்குமாறு இந்தியா, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

உத்தியோகப் பற்றற்ற ரீதியில் இந்திய அரசாங்கம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பான் கீ மூனின் இலங்கை தொடர்பான ஆலோசனைக் குழு அண்மையில் தமது பணிகளை ஆரம்பித்திருந்த நிலையில் இந்திய இலங்கை உடன்படிக்கையில் பின்னர் அமைதி காக்கும் நோக்கில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய அமைதி காக்கும் படையில் கடமையாற்றிய சித்தார்த்த சட்டர்ஜீ என்ற உயர் இராணுவ அதிகாரி இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

சித்தார்த்தா சட்டர்ஜீ ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் மகளைத் திருமணம் முடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் குறித்த இராணுவ (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ். குடாநாட்டின் அனைத்து அதிகாரிகளும் நேர்மையுடன் தமது பணியை ஆற்ற வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் அனைத்துத் துறைசார்ந்த உயரதிகாரிகளும் நேர்மையாகவும் நியாயமாகவும் நடைமுறைகளைக் கையாள வேண்டும் எனப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட அரச செயலகத்தில் நேற்று நடைபெற்ற நுகர்வோர், வர்த்தகர்கள் மற்றும் அரச நிர்வாகத்துறை சார்ந்த அதிகாரிகளுடனான சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், குடாநாட்டில் தற்போதுள்ள நடைமுறைகள் குறித்துத் தாம் ஆராய்ந்து வருவதாகவும் முக்கியமாக நடைமுறையிலுள்ள கட்டுப்பாடுகளால் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

இதனடிப்படையில் மக்கள் நலன்சார்ந்த விடயங்களில் தாம் கூடிய கவனம் செலுத்தி வருவதாகக் குறிப்பிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

துறைசார்ந்த உயரதிகாரிகள் தமக்குரிய கடமைகளில் நேர்மையாகவும் நியாயமாகவும் உண்மையாகவும் செயற்பட வேண்டும். அதற்குத் தன்னுடைய பங்களிப்பும் ஒத்துழைப்பும் என்றைக்கும் இருக்கும் எனவும் மக்கள், பொலிஸ் மற்றும் படைத்தரப்பால் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வு காணப்படும் எனவும் அமைச்சர் உறுதிமொழி வழங்கினார்.

அரச அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் மரக் காலைகளைப் பதிவு செய்தல் சம்பந்தமான நடைமுறைகள், மரங்களைக் கொண்டு செல்லுதல் தொடர்பான நடைமுறை, தனியார் மருந்தகங்களுக்கான மருந்தாளர்களது பதிவு, மருந்து வகைகளில் விலை தொடர்பான நடைமுறைகள், மணல் பெற்றுக் கொள்ளும் முறைகளும் அதை வெவ்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லுதல் தொடர்பான நடைமுறைகள்,

கால்நடைகளை மாவட்டத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கொண்டு செல்வதில் உள்ள நடைமுறைகள், பனைகளை வெட்டுதல், கொண்டு செல்லுதல் தொடர்பாக நடைமுறைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இச் சந்திப்பில் யாழ்.அரச அதிபர், மேலதிக அரச அதிபர், யாழ்.மாநகர முதல்வர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்டத்திற்குரிய உதவி அரச அதிபர்கள் மற்றும் துறைசார்ந்த அதிகாரிகள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தனர். (ந)

## சஜித்தை தலைவராக்க ஐ.தே.க. உறுப்பினர்கள் ஆதரவு



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாசவை நியமிக்க வேண்டும் என அநுராதபுரம், பொலனறுவை, காலி மாவட்டங்களில் உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்த ஐ.தே.க. அங்கத்தவர்கள் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளனர். அநுராதபுரத்தில் 48 அங்கத்தவர்களில் 36 பேர் இத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

காலியில் 57 அங்கத்தவர்களில் 44 பேர் இதற்கு ஆதரவாக வாக்களித்தனர். பொலறுவை மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்த ஐ.தே.கவின் 19 அங்கத்தவர்களும் இத் தீர்மானத்துக்கு ஏகமனதாக வாக்களித்தனர். (ந-5)

## அரிசிக்கான விலை நிர்ணயம் யாழ்.அரச அதிபரிடம் அதிகாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் விசேட தரமான அரிசி வகைகளின் விலை நிர்ணயம் தொடர்பான அதிகாரத்தை யாழ்.அரச அதிபருக்கு வழங்குவதற்குப் பாவனையாளர் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் விசேட வர்த்தமானி அறிவித்தலைக் கூட்டுறவு, நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு வெளியிடவுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பாவனையாளர் அதிகார சபையின் சட்டத்தின்படி நாடுபூராகவும் நாட்டரிசிக்கு ஒரே விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மொட்டைக் கறுப்பன் போன்ற விசேட தரத்தில் உள்ள அரிசி வகைகளுக்குத் தனியான விலை நிர்ணயம் செய்யப்படவில்லை.

இதனால் யாழ்.மாவட்டத்தில் விசேட தரத்திலான அரிசி வகைகள் நாட்டரிசியின் நிர்ணய விலையிலும் பார்க்க அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறு விசேட தர அரிசி வகைகளை அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தகர்களுக்குப் பாவனையாளர் அதிகார சபையின் யாழ்.அதிகாரியினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந் நிலையில் யாழ்.வணிகர் கழகத்தினால் மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டமைக்கு அமைவாக பாவனையாளர் அதிகார சபை விசேட தரத்திலான அரிசி வகைகளுக்கான விலை நிர்ணய சட்டத்தில் தளர்வை மேற்கொள்ளவுள்ளது.

இதன்படி யாழ்.மாவட்டத்தில் விசேட தரத்திலான அரிசி வகைகளின் விலை நிர்ணய அதிகாரத்தை யாழ்.அரச அதிபருக்கு வழங்குவதற்கு பாவனையாளர் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.


இது தொடர்பிலான விசேட வர்த்தமானி அறிவித்தலை கூட்டுறவு, நுகர்வோர் விவகாரம் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் விரைவில் வெளியிடப்படவுள்ளது. (ந-5)

## காயமடைந்த பொலிஸார் கொழும்புக்கு

கரடியனாறு குண்டுவெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 16 பொலிஸ் உத்தியோகத்தர்களும் நேற்றுக் கொழும்பு நாரகேன்பிட்டி பொலிஸ் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலிருந்து 5 அம்புலன்ஸ் வண்டிகள் மூலம் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். (ந-5)

## கண்ணீர் அஞ்சலி



வலம்புரிக் குடும்பத்தைச் சேர்ந்த கோ.சுரேஸ்குமார் அவர்களின் தந்தையார்

**ஆறுமுகம் கோவிந்தராஜா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இ வலம்புரிக் குடும்பம்


## பாடசாலை அதிபர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை பயிற்சி வகுப்புக்கள்

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் அதிபர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டும் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றது.

பயிற்சி பெற விரும்புவோர் தமது பெயர்களை 20.09.2010 (திங்கள்) தொடக்கம் தினமும் காலை 8.30 முதல் மாலை 4.00 மணிவரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் பதிவு செய்யவும்.

இல. 12/1, முதலாவது தெரு,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

விபரங்களுக்கு: ஒருங்கிணைப்பாளர்
0772939702, 0777184410

(C-1237)

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச்சங்கம் (வ.து)
## தேநீர்ச்சாலை நடாத்துவதற்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி வைத்தியசாலையில் தேநீர்ச் சாலை நடத்துவதற்கான சுகாதாரத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்கு அமைவாக நடாத்தக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சங்க எல்லைப்பரப்புக்கு (உ.அ.அ.பிரிவு- காரைநகர், வலி மேற்கு, பண்டத்தரிப்பு, சில்லாலை கிராமம் உள்ளடங்கிய பகுதிகள்) உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பப்படிவத்தை மேற்படி வைத்தியசாலையில் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத்திகதி :- 30.09.2010

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்,
மூளாய், சுழிபுரம். (C-1234) தலைவர்

## A/L எழுதிய மாணவர்களுக்கு

ஒரு மணிநேர இலவச Spoken English Workshop. அனுமதிகள் இலவசம்.
அத்துடன் பேசுதலுக்கான Key board மற்றும் சான்றிதழ்கள் இலவசம்

காலம்:- 21.09.2010 (செவ்வாய்க்கிழமை)
பிரிவுகள்:- காலை 8-9, 9-10, 10-11, 11-12,
மாலை 1-2, 2-3, 3-4, 4-5
இடம்:- My Way English,
182, Stanley Road, Jaffna. T.P:- 0711257035

(2506)

## போட்டிப் பரீட்சை வகுப்புகள் இவ்வாறம் நான்கு இடங்களில் ஆரம்பமாகின்றன

- அழகியல் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்தல்
- பொது அறிவு.பொது உளச்சார்பு தொடர்பான ஏனைய பரீட்சைகளுக்கும்

உயர் கலைக்கல்லூரி (மீசாலைச் சந்தி), கிறிஸ்ரல் நெல்லியடி, சுப்ரா சித்தன்கேணி, யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு -யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெறும். நேர அட்டவணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியர்- தவசேகர் (C-238)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு சம்பியன் ஒழுங்கையில் இருந்து இராமகிருஷ்ணா பாடசாலைக்குப் பின்பக்கமாகப் போகும் பாதையில் பாடசாலையில் இருந்து 150 யார் தூரத்தில் கிணற்றுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:0777989126

(C-2508)

## செல்லா சினிமா




காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

### மீண்டும் யாழில்

**20.09.2010 முதல் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.**

**பதிவுக் கட்டணம் ரூபா: 250/-**

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா ,மாத விடாய்க் கோளாறுகள் , வெள்ளை போடுதல், குழந்தைப் பேறின்மை , வாதநோய், தலையிடி ,பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர ) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ஞூரிஸ் இன்
(சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

(C-888)

# இன்று ஒரு தகவல்

## முதலைக்கண்ணீர்

ஒருத்தன் இருந்தான். அவன் எல்லோரிடமும் நன்றாகப் பழகுவான். அதனால் அவனுக்குப் பலரைத் தெரியும்.

திடீரென்று ஒருநாள் அவன் இறந்து விட்டான். எல்லோருக்கும் மிகவும் கஷ்டமாகி விட்டது.

சொந்தக்காரர்கள், சிநேகிதர்களெல்லாம் அழுதார்கள்.

கொஞ்ச நாட்களில் எல்லோரும் அந்தக் கவலையை மெல்ல மெல்ல மறந்து விட்டார்கள்.

ஒரு வருடமாகிவிட்டது.

அதற்குப் பின்னரும் ஒரு ஆள் இவனை நினைத்து அழுது கொண்டிருந்தார்.

"இப்படி மோசம் பண்ணிவிட்டு போய்விட்டாயே" என்று அழுது கொண்டிருந்தார்.

பக்கத்திலிருந்தவர்கள் ஆறுதல் சொன்னார்கள்.

"கவலைப்படாதீர்கள். விதியை யாரால் மாற்ற முடியும்? மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள்" என்றார்கள்.

"அது எப்படி முடியும்? அந்த ஆள் என்னிடம் ஆயிரம் ரூபா கடன் வாங்கியிருந்தானே. இப்படி மோசம் பண்ணிவிட்டுப் போய் விட்டானே. இனிமேல் யாரிடம் அதை வாங்க முடியும்?" என்று சொல்லி இவர் மறுபடியும் அழ ஆரம்பித்தார்.

இந்த அழுகைக்கு அர்த்தம் என்ன?

இது பாசத்தினால் வந்த அழுகையில்லை.

அழுகை வித்தியாசப்படுவது போன்று கண்ணீரும் வித்தியாசப்படும்.

ஆனந்தக் கண்ணீர், அழுகைக் கண்ணீர் போன்று முதலைக் கண்ணீரும் இருக்கிறது.

பொய்யான அழுகை அழுபவனை "முதலைக் கண்ணீர்" வடிக்கிறான் என்று சொல்வார்கள்.

முதலை ஏன் கண்ணீர் வடிக்கிறது தெரியுமா?

அதுதான் இன்றைக்குத் தகவல்.

கடல் நீர் உப்புச் சுவையாக இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

ஒரு லீற்றர் கடல்நீரில் 35 கிராம் உப்பு இருக்கிறது. ஒருத்தர் வேறு வழியில்லாமல் கடல் தண்ணீரையே குடித்துக் கொண்டிருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

என்ன ஆகும்?

கடல் வற்றிப் போய்விடுமா? ஒன்றும் ஆகாது. இவருக்கு உடம்பு தான் பாதிக்கப்படும்.

கணிசமான அளவுக்கு சோடியம், பொட்டாசியம், கல்சியம் போன்ற உப்புக்கள் அவருடைய உடம்புக்குள் போய்விடும். உள்ளே போய் சும்மாவா இருக்கும்? இரத்தத்தில் கலக்கும். கடைசியில் மிகவும் ஆபத்தில் முடிந்துவிடும்.

நம்முடைய நிலைமை இப்படியென்றால் கடலிலேயே கிடக்கும் முதலையின் நிலைமை எப்படித் தெரியுமா?

முதலை மட்டுமல்ல. கடலிலேயே வாழும் உயிரினங்கள் நிறைய இருக்கிறது.

அவையெல்லாம் உணவுடன் சேர்த்து நிறைய கடல்நீரையும் உள்ளெடுக்கின்றன. அதனால் கடல் நீரிலுள்ள உப்புக்களும் அதிகமாக உள்ளே போய்விடுகிறது.

இந்த உப்புக்களை வெளியேற்றுவது எப்படி?

மேலதிக உப்பை வெளியேற்றுவதற்கு அவற்றிடம் ஒரு உறுப்பு இருக்கிறது.

அதற்குப் பெயர் உப்புச்சுரப்பி (Salt gland) முதலைக்கு இந்த Salt gland இன் துவாரம் எங்கே இருக்கிறது தெரியுமா?

அதனுடைய கண்ணின் ஓரத்தில் இருக்கிறது.

அது வழியாக மேலதிக உப்பு வெளியேற்றப்படுகிறது.

இது ஒரு திரவமாக வெளியே வருகிறது.

பார்ப்பதற்கு இது கண்ணீர் போலத் தோன்றும்.

ஆனால் அதிலிருப்பது முழுவதும் உப்பு.

இந்த முதலைக் கண்ணீரைக் கொஞ்சம் எடுத்து அதில் எவ்வளவு உப்பு இருக்கிறது என்று சோதனை செய்து பார்த்தார்கள்.

முதலைக் கண்ணீரிலுள்ள சோடியம் உப்பு கடல் நீரினுள்ளதை விட மூன்றுமடங்கு அதிகமாக இருக்கிறதாம்.

முதலையின் இரத்தத்திலுள்ள உப்பை விட முதலைக் கண்ணீரிலுள்ள உப்பு 5 மடங்கு அதிகமாக உள்ளதாம்.

அதனால் முதலை அழுவது எதற்காக வென்றால், மேலதிகமான உப்பை வெளியேற்றுவதற்காக அது கவலையினால் அழவில்லை.

சில பேர் அதைப் பார்த்துவிட்டு, "முதலை கண்ணீர் வடிக்கிறது" என்று சொல்வார்கள்.

அப்படிச் சொல்வது தவறு.

அதனால் தான் பொய்யான அழுகை அழுபவர்களை 'முதலைக் கண்ணீர் வடிக்கிறான்' என்று சொல்வார்கள்.

ஜப்பானில் ஒரு கதை உண்டு.

தனது மாமியார் இறந்ததற்காக மருமகள் அழுது கொண்டிருந்தாளாம். துக்கம் தாங்க முடியாமல் கேவிக்கேவி அழுது கொண்டிருந்தாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அயல்வீட்டுக்காரர்கள், "மாமியாரை இழந்ததில் உனக்கு இவ்வளவு வருத்தமா?" என்று கேட்டார்கள்.

அதற்கு அந்தப் பெண் சொன்னாள்:

"அவர் இறந்ததையெண்ணி நான் அழவில்லை. மறுபடியும் பிழைத்து விடுவாரோ என்று நினைத்துத் தான் அழுகிறேன்" என்றாள்.

இந்தக் கண்ணீரை எந்த ரகத்தில் சேர்ப்பது?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ். மாவட்டத்தில் புதிய மின் விநியோக திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன

இலங்கைக்கு மின்சாரத்தை அறிமுகப்படுத்திய டி.ஜே. விமல சுரேந்திரவின் 136ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இலங்கைக்கு ஒளியேற்றுவோம் என்ற திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் வெவ்வேறு இடங்களில் புதிய மின்விநியோகத் திட்டங்களைபாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்துள்ளார்.

இதன் பிரகாரம் கோப்பாய் கயிட்டப்புல வீதி வரிக்கம்புரை கிராமத்திற்கான மின் விநியோகத்திட்டம் கடந்த வெள்ளிகிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பெயர்ப்பலகையினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திரை நீக்கம் செய்ததுடன் வலி கிழக்கு பிரதேசசெயலர் மோகன்றாஸ் இலங்கை மின்சாரசபையின்வட பிராந்திய முகாமையாளர் முத்துரட்ணானந்தம் ஆகியோர் மின் அழுத்திகளை அழுத்தி மின் விநியோகத்திட்டத்தை சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கி வைத்தனர்.

இத்திட்டத்தின் மூலம் 66 குடும்பங்கள்பயன்பெறவுள்ளதாகவும் இதற்காக 5.5. மில்லியன் ரூபா செலவிடப்பட்டதாகவும் 2011 ஆண்டுநிறைவடையும் போது குடாநாடு முழுமையிலும் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதேபோன்று மறவன்புலோ வடக்குப் பகுதியிலும் மற்றுமொரு மின்விநியோகத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் 52 குடும்பங்கள் நன்மையடையவுள்ளதுடன் இப்புதிய செயற்றிதிட்டத்திற்காக 11.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதாக வடபிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

இதேபோன்று புங்குடுதீவிலும் புதிய மின் விநியோகத்திட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

இப்புதிய மின் விநியோகம் வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இலங்கையில் நீர் மின்சாரத்தை ஆரம்பித்து வைத்த விமல சுரேந்திராவின் 136ஆவது பிறந்த நாளை ஒட்டி நாடளாவிய ரீதியில் 99 மின் விநியோகத்திட்டங்கள் ஆரம் பித்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் வட மாகாணத்தில் 18 மின் விநியோகத்திட்டங்களும் இதில் யாழ் .குடாநாட்டில் 3 மின் விநியோகத்திட்டங்களும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்படத்தக்கது. (ஶ்ரீ)

# இராசி பலன்

*20.09.2010*
*(புரட்டாதி 4, திங்கட்கிழமை)*
*துவாதசி முற்பகல் 9.10 மணிவரை*
*அவிட்டம் பின்னிரவு 5.06 மணிவரை*
*இராகு காலம் 7.33-9.03 மணிவரை*
*சுபநேரம் 12.03-1.33 மணிவரை*
*பிரதோச விரதம்*

**மேடம்** ஒளிமயமான எதிர்காலத்திற்கு அஸ்திவாரம் அமைத்துக் கொள்வீர்கள், தொழில் ரீதியாக புதிய கூட்டாளிகள் வந்திணைவர், வீட்டை பழுது பார்க்கும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** மனக்குழப்பம் அகன்று ஒருவகையான சந்தோசம் குடிகொள்ளும், முன்னோர் சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள் விலகும், நந்தி வழி பாட்டால் நலம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இடம் பெறலாம், நண்பர்களுடன் எச்சரிக்கையாக நடப்பது நல்லது, உடல் நலத்தில் கவனம் தேவை.

**கடகம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், உங்கள் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன் வருவர், கல்யாணக் கனவுகள் நனவாகும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன் வருவீர்கள்.

**சிங்கம்** வழிபாட்டால் மேன்மையடைய வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், கடிதங்கள் மூலம் கனிவான செய்தி வந்து சேரும், பழைய கடன்கள் வசூலாகும் நிலை தோன்றும்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், பிள்ளைகளால் ஏற்படும் செலவுகளை குறைக்கும் எண்ணம் மேலோங்கும், வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள்.

**துலாம்** நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள், தாய் வழி ஆதரவு பெருகும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், வாகன யோகமுண்டு.

**விருச்சிகம்** பிரதோச வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், பாராட்டும் புகழும் கூடும், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரும், பிரயாணம் நன்மை தரும்

**தனுசு** எதிர்பாராத தனலாபம் இல்லம் தேடி வரும், இல்லத்தில் மங்கல இசை தோன்றுவதற்கான அறிகுறி தோன்றும், பொருளாதார முன்னேற்றம் ஏற்படும், கொடுக்கல் வாங்கல்கள் சீராகும்.

**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், தடைப்பட்ட காரியம் கைகூடலாம், உடல்நலம் சீராகும், பேச்சைக் குறைத்துச் செயலில் தீவிரம் காட்டும் எண்ணம் மேலோங்கும்.

**கும்பம்** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், இடமாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும், புண்ணிய காரியங்களில் நாட்டம் அதிகரிக்கும், மாலை நேரம் மகிழ்ச்சியான செய்தி வந்து சேரலாம்.

**மீனம்** கூட்டு முயற்சி வெற்றி பெறும், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரும், கையில் பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், நந்தி வழிபாடு நன்மை தரும்.

**வளவன்**

# விவசாயிகளுக்கான ஓய்வூதிய திட்டம்; அடுத்த வருடம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது

விவசாயிகளுக்கு கூடுதலான நன்மையினைப் பெற்றுக் கொடுக்கும் புதிய விவசாய ஓய்வூதியத் திட்டமொன்றை அடுத்த வருடம் அறிமுகப்படுத்தவுள்ளதாக விவசாய கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

மஹிந்த சிந்தனையில் எதிர்கால திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள *இலங்கையை ஆசியாவின் அதிசயம் மிக்க நாடாக்கும்* திட்டத்திற்கு அமைய விவசாய கமநல காப்புறுதி சபையை செயற்திறன் மிக்க நிறுவனமாக மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக அதன் தலைவரும் சட்டத்தரணியுமான சுமன ஆரியதாச கூறியுள்ளார்.

இந்த இலக்கை எய்துவதற்கு விரைவான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. விசேடமாக வேளாண்மையை காப்புறுதி செய்வதன் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு அறிவூட்டும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ஶ்ரீ-7)

# முதலீட்டு அபிவிருத்தி சபைக்கு பதிலாக புதிய அதிகாரசபை

(கொழும்பு)


இலங்கை முதலீட்டு அபிவிருத்தி சபைக்குப் பதிலாக புதிய அதிகார சபையொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. முதலீட்டு அபிவிருத்திச் சபை கலைக்கப்பட்டு அதனை விடவும் செயற்திறன் மிக்க ஓர் அதிகார சபையொன்று உருவாக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை அதிகமாக ஈர்க்கும் நோக்கில் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

முதலீட்டு அபிவிருத்தி சபையை விடவும் கூடிய அதிகாரங்களைக் கொண்ட ஓர் கட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது. (ஶ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 100 | 90 |
| உருளைக்கிழங்கு | 90 | 85 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 100 |
| தக்காளி | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 70 |
| கரட் | 80 | 70 | 80 |
| பூசணி | 40 | 35 | 30 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 70 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 40 | 70 |
| பாகற்காய் | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 30 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 70 |
| பயற்றங்காய் | 60 | 45 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 30 | 20 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 100 |
| போஞ்சி | 100 | -- | 120 |
| கத்தரிதம்புள்ள | 70 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 25 |
| தேசிக்காய் | 70 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-40 | 30 |



ஆளுநர்களின் 13 ஆவது மாநாடு திருகோணமலை அலஸ்தோட்டம் சாயாபுளூ விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஒன்பது மாகாணங்களினதும் ஆளுநர்கள் அழைத்து வரப்படுவதையும் இம் மாநாட்டின் தலைமைப் பொறுப்பை வடமத்திய மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரமவிடம் கையளிப்பதையும் இதில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## மகளிருக்கான பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)


யாழ்.கலாலயா பயிற்சியகத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை மகளிருக்கான கேக் ஐசிங், உணவு தயாரித்தல், உடை தயாரித்தல், கூந்தல் அலங்காரம், கைவேலை , பூவேலை மற்றும் பப்றிக் வர்ணந்தீட்டுதல் ஆகிய பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதில் வடமராட்சி மற்றும் தென்மராட்சி பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் திருவிழா நிறைவு பெற்ற பின்னர் விசேட அனுமதிகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது . (ஸ்ரீ-2)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/மகாஜனா கல்லூரியின் நூற் றாண்டு விழாவினையொட்டி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 " ஸ்கிறபிள்" (SCRABBLE) விளையாட்டுப் போட்டி கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ)




# வன்னி பிரதேச ஆசிரியர்களுக்கான — போக்குவரத்து ஒழுங்குகள் —

வடமாகாண ஆளுநரின் பணிப்பின் பேரில் வடமாகாண சபையினால் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி மாவட்டப் பாடசாலைகளுக்குச் செல்வதற்காக ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச பஸ் போக்குவரத்து சேவையானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6.30 மணிக்குப் புறப்படும் பஸ் கிளிநொச்சி, மாங்குளம் ஊடாகத் துணுக்காயைச் சென்றடையும்.

அத்துடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கோரப்பட்டதற்கமைய வடமாகாண ஆளுநரின் அனுமதியுடன் வடமாகாண சபையினால் முறிகண்டியிலிருந்து, அக்கராயன் பிரதேசத்திற்கான இணைப்புச் சேவையை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இச்சேவையினைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் இதற்கான பருவச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக வட பிராந்திய போக்குவரத்துச் சபையிடம் விண்ணப்பிக்குமாறு வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## சனசமூக நிலையத்திற்கு தளபாடங்கள் வழங்கப்பட்டன

தெல்லிப்பழை கிழக்கு சித்தியம்புளியடியில் அமைந்துள்ள கலைச்செல்வி சனசமூக நிலையத்திற்கு சனசமூக நிலைய பாவனைக்கென அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் தளபாடங்கள் அன்பளிப் பாக வழங்கப்பட்டன.

இவற்றில் கதிரைகள், புத்தக அலுமாரி, மேசைகள் (மாணவர் மேசைகள்) ,வாங்குகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன. இவ் உபகரணங்கள மேற்படி சனசமூக நிலைய நிர்வாகிகளிடம் கடந்த 15 ஆம் திகதி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் வைத்து நிறுவன அதிகாரிகளினால் கையளிக்கப்பட் டன. (ஸ்ரீ-53)

## போயா மாதாந்த ஆன்மீக சாதனையும் சீரடி சாயி பாபா சத்சரித படன வாசிப்பு ஆரம்பமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை அதிகாலை 4.45 மணிக்கு நகரசங்கீர்த்தனம் நடைபெறும். காலை 8.45 மணிக்கு போயா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி பஜனை மற்றும் மங்களாராத்தி என்பன இடம்பெறவுள்ளன.

அத்துடன் காலை 8.45 மணிக்கு சீரடி சாயிபாபா சத்சரித படன வாசிப்பு ஆரம்பமாகி எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீரடி சாயி பாபா அவதார தின விழாவுடன் சத்சரித படனம் வாசிப்பு நிறைவடையும் என யாழ். சத்தியசாயி சேவா நிலையம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# மருதங்கேணி கோட்டத்துக்குட்பட்ட சகல பாடசாலைகளையும் விரைவில் திறக்க நடவடிக்கை

(அல்வாய்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளையும் விரைவில் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய இன்று உடுத்துறை மகா வித்தியாலயம் மற்றும் மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவை சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்படவுள்ளன.

ஏற்கனவே இவ்விரு பாடசாலைகளுக்குமான தற்காலிக கொட்டகைகள் மாணவர்களுக்கான தளபாடங்கள், உருக்கு அலுமாரிகள் மற்றும் காரியாலயத்திற்கான ஆவணங்கள் என்பன வலயக் கல்வி அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இம்மாத இறுதியில் மாமுனை அ.த.க.பாடசாலை, செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை,தாழையடி றோ.க.த.க. பாடசாலை, கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை, வெற்றிலைக்கேணி றோ.க.த.க. பாடசாலை, கேவில் அ.த.க.பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா இந்து தமிழ்க்கலவன் வித்தியாலயம் ஆகியவற்றை திறப்புதுடன் இப் பாடசாலைகளுக்கான அதிபர்களை தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சையை நடத்த வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய ஏற்கனவே, கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றியவர்களையும் அண்மையில் இலங்கை அதிபர் சேவையில் சித்தியடைந்த அதிபர்களையும் நியமிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

மேலும் இப் பாடசாலைகளுக்கு உரிய தளபாடங்கள் மற்றும் புனரமைப்பு வேலைகளை சேவாலங்கா நிறுவனமும் SDC நிறுவனமும் முன்வந்துள்ளன. இதற்கியைில் வடமராட்சி வடக்கு, மேற்கு ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள தளபாடங்களையும் திருத்தம் செய்யவேண்டிய தளபாடங்களையும் வலயக் கல்வி அலுவலகம் பொறுப்பேற்று வடமராட்சி கிழக்கில் திறக்கப்படவுள்ள பாடசாலைகளுக்கு அனுப்பவுள்ளது.

மேலும் பாடசாலைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் எஸ்.திருலிங்கராஜா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (ஸ்ரீ-19)

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த அரியாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி (A.R.V.) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றப்படும் தினமும் இடங்களும் வருமாறு,

| திகதி | நேரம் | தடுப்பு மருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 2010.09.20 | மு.ப.9.00-மு.ப.11.00 | கலைமகள் சனசமூக நிலையம், கலைமகள் வீதி |
| | மு.ப.11.30-மு.ப.01.30 | காந்தி சனசமூக நிலையம், ஆசீர்வாதப்பர் வீதி |
| 2010.09.21 | மு.ப.9.00-மு.ப.11.00 | அருணோதயா சனசமூக நிலையம் |
| | மு.ப.11.30-மு.ப.01.30 | திருமகள் சனசமூக நிலையம், திருமகள் வீதி |
| 2010.09.23 | மு.ப.9.00-மு.ப.11.00 | இளங்கதிர் சனசமூக நிலையம், றக்கா வீதி |
| | மு.ப.11.30-மு.ப.01.30 | பாப்பையா கடையடிச் சந்தி மருதடி வீதி, நல்லூர் |
| 2010.09.24 | மு.ப.9.00-மு.ப.11.00 | கச்சேரி நல்லூர் வீதி,நாவலர் வீதிச் சந்தி |
| | மு.ப.11.30-மு.ப.01.30 | நல்லூர் தெற்கு சனசமூக நிலையம் , நல்லூர் |
| 2010.09.27 | மு.ப.9.00-மு.ப.11.00 | புங்கன்குளம் சனசமூக நிலையம், புங்கன்குளம் வீதி |
| | மு.ப.11.30-மு.ப.01.30 | தியாகராசா படிப்பகம், கண்டிவீதி அரியாலை |
| 2010.09.29 | மு.ப.9.00-மு.ப.11.00 | சரஸ்வதி சனசமூக நிலையம், கண்டிவீதி |
| | மு.ப.11.30-மு.ப.01.30 | கணக்கர்சந்தி |
| 2010.09.30 | மு.ப.9.00-மு.ப.11.00 | பாரதி சனசமூக நிலையம், செம்மணிவீதி, நாயன்மார்க்கட்டு |
| | மு.ப.11.30-மு.ப.01.30 | அம்பாள் சனசமூக நிலையம், அம்பாள்வீதி, நாயன்மார்க்கட்டு |
| 2010.10.01 | மு.ப.9.00-மு.ப.11.00 | கனகரட்ணம் வீதி, நாவலர் வீதிச் சந்தி |
| | மு.ப.11.30-மு.ப.01.30 | சுஜா போட்டோ, முன்புறம், பாரதி வீதி |
| 2010.10.04 | மு.ப.9.00-மு.ப.11.00 | கலைவாணி சனசமூக நிலையம், பொன்னம்பலம் வீதி |
| | மு.ப.11.30-மு.ப.01.30 | ஆட்காட்டி வீதி, அருளம்பலம் வீதி சந்தி |
| 2010.10.05 | மு.ப.9.00-மு.ப.11.00 | மிருக வைத்திய நிலையம், A.V.றோட் |
| | மு.ப.11.30-மு.ப.01.30 | பென்ரிகோஸ் லேன் அருகில்,கண்டி வீதி கச்சேரியடி |
| 2010.10.06 | மு.ப.9.00-மு.ப.11.00 | லக்கி கடையடி, ஆசீர்வாதப்பர் வீதி |
| | மு.ப.11.30-மு.ப.01.30 | இராஜேஸ்வரி வீதி, நிறைபார்க்கும் மையம் |

(ஸ்ரீ)

# நோய் அறிகுறிகள் காணப்படுமிடத்து உடனடியாக வைத்தியசாலையை நாடவும்

## சாவகச்சேரி வைத்திய அதிகாரி அறிவுறுத்தல்

(சாவகச்சேரி)

காய்ச்சல், தலையிடி,கைகால் உளைவு மற்றும் கழுத்து வலி போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறுமாறு சாவகச்சேரி வைத்திய அதிகாரி டாக்டர் க.தயாளன் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த சிவகரன் ஜெயமீரா (வயது- 27) என்பவர் ஒருவிதக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட போது சிகிச்சை பலனின்றி மரணமானார்.

இதனையடுத்து அவ்விடத்திற்கு விஜயம் செய்த சுகாதாரப் பரிசோதகரும் சாவகச்சேரி வைத்திய அதிகாரி குழுவினரும் அவ் வீட்டிலுள்ளவர்களுக்கு தடுப்பு மருந்து வழங்கியதுடன் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட மிகுதி 6 பேரை அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர்.

இதனால் மேற்கூறிய நோய் அறிகுறிகள் காணப்படுமிடத்து உடனடியாக வைத்தியசாலையை நாடுமாறு வைத்திய அதிகாரி பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-29)

# அமரர் லசந்த விக்ரமதுங்கவிற்கு மற்றுமொரு சர்வதேச ஊடக விருது

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் அமலர் லசந்த விக்ரமதுங்கவிற்கு மற்றுமொரு சர்வதேச ஊடக விருது வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச ஊடக நிறுவனத்தினால் வழங்கப்படும் துணிகர ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச விருது அமரர் லசந்த விக்ரமதுங்கவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

வியன்னாவில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் லசந்தவின் சகோதரரும் சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான லால் விக்ரமதுங்க இந்த விருதினைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்த விருது வழங்கும் விழாவில் லசந்த விக்ரமதுங்க, மேய் சிடியாக், லாவு சானர் கார்னர், நெடி செனர், லைடியா காசோ, பாப் சய்னே, அக்பர் கான்சி மற்றும் யோஹானி சான்சீஸ் ஆகிய ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச ஊடக நிறுவனம் 60 ஆவது ஆண்டு நிறைவை இந்த ஆண்டு கொண்டாடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நெருக்கடியான நிலைமைகளில் துணிகரமாக ஊடகப் பணியில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் இந்த விருது வழங்கும் விழாவில் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

(ஸ்ரீ-2)

# முல்லை.நீர்ப்பாசன திணைக்களத்திற்கு பிக்கப் வாகனம் கையளிப்பு

(கொழும்பு)

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ரூபா.4.5 மில்லியன் பெறுமதியான பிக்கப் வாகனம் ஒன்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியால் கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆளுநர் செயலக வளாகத்தில் வைத்து முல்லைத்தீவு மா்வட்ட நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப்ப்ணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

இது முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்பாடுகளை துரிதப்படுத்தும் என குறிப்பிடப்படுகிறது.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண ஆளுநரின் செயலாளர், உட்கட்டுமான அமைச்சின் செயலாளர், பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்), மாகாணப் பணிப்பாளர் (நீர்ப்பாசன திணைக்களம்), மாகாணப் பணிப்பாளர் (விவசாயம் திணைக்களம்), மாகாணக் கல்வி பணிப்பாளர், பணிப்பாளர் (கலாசாரம்), திட்ட முகாமையாளர் (பீஸ் திட்டம்) மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ-2)





**உன்னத சேவைக்காக இணைந்துள்ள குழுவினர்**

சங்கானை மக்களே, இன்று முதல் உங்கள் சகல வங்கி அலுவல்களையும் கவனிக்கவிருக்கும் இந்த வெற்றி அணிக்கு நல்வரவு கூறுங்கள்.

இன்று திறந்துவைக்கப்படும் எமது 194ஆவது வாடிக்கையாளர் நிலையத்தின் அச்சாணியாக விளங்கும் இத் தொழில் நிபுணர்கள் உங்களுக்கு அதிசிறந்த வங்கிச் சேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவார்கள்.

HNB சங்கானை, இல.146, பிரதான வீதி, சங்கானை.
எமது வங்கிச் சேவைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:
021-4920297 அல்லது 021-2250065

HATTON NATIONAL BANK HNB

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

SAATCHI & SAATCHI

## இருவருடங்களாக பூட்டிய நிலையிலுள்ள சனசமூக நிலையம்

(பொலிகண்டி)

கரவெட்டி கிழக்கு வளர்மதி சனசமூக நிலையம் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் பூட்டிய நிலையிலேயே காணப்படுகின்றது.

குறித்த சனசமூக நிலையம் பூட்டிய நிலையில் இருப்பதால் அப்பகுதி மக்கள் பத்திரி கைகள் வாசிப்பதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாகவும் குறித்த சன சமூக நிலையத்தை அதன் நிர்வாகத்தினர் விரைவாக திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஸ்ரீ-7-48)

## இ.போ.சபையின் பஸ்சேவை செம்பியன்பற்று வரை நீடிப்பு

(திருநெல்வேலி)

பருத்தித்துறையிலிருந்து ஆழியவளை வரை சேவையிலீடுபடுத்தப்பட்டு வந்த இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவையானது கடந்த 17 ஆம் திகதி முதல் செம்பியன்பற்று வரை சேவையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீள்குடிய மர்த்தப்பட்டுள்ளமையை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் மாமுனை, செம்பியன் பற்று, நெல்லியான், மாணியவளை போன்ற பகுதிகளில் மக்கள் தற்போது மீளக் குடியமர்ந்துள்ள நிலையில், செம்பியன்பற்று வரை பஸ்சேவை நீடிக்கப்பட்டுள்ளமையால் மக்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர்.

இதுவரை நாளும் செம்பியன் பற்று பகுதியில் உள்ள மக்கள் மருதங்கேணி சந்திப் பகுதிக்கு நீண்ட தூரம் நடந்துவந்து போக்கு வரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் இவ்வாறு நீண்டதூரம் சென்று வாகன வசதி களைப் பெற்று வந்த மக்கள் தற்போது தாம் குடியேறிய இடத்திலேயே இலங்கைப் போக்குவரத்து சபை பஸ்ஸில் பயணம் செய்யக் கூடியதாக இருப்பதாக அம் மக்கள் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2-7-43)

## மரண அறிவித்தல்கள்

### ரகுலேஸ்வரன் காஞ்சனாதேவி



யாழ்ப்பாணம் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் நீர் வேலியை வதிவிடமாகவும் தற்போது லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ரகுலேஸ்வரன் காஞ்சனாதேவி 28.08.2010 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் அமரர் பொன்னுத்துரை மற்றும் சறோஜினிதேவி தம்பதியரின் மகளும் அமரர் நவரத்தினம் மற்றும் பூமலர் தம்பதியரின் மருமகளும் நவரத்தினம் ரகுலேஸ்வரனின் அன்பு மனைவியும் வைஷ்ணவி, தட்ஷணவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ரமேஸ்வரன் (கனடா), கருணா கரன் (கனடா), காண்டீபன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ரவிநாதன்,அமரர் ஜெயசிறி மற்றும் ஜெய வதி, ஜெயவதனி (கனடா),விமலேஸ்வரன் (கனடா), சிவனேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நேற்று (19.09.2010) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மில்லேன்,
மல்லாகம்.
தொ.பே.இல: 0771345985

தகவல்
பொ.காண்டீபன்.

(சி/1059)

## யுத்தம் காரணமாக கண்டாவளை பிரதேசத்தில் 697 பெண்கள் விதவைகளாகியுள்ளனர்

### உதவி அரசாங்க அதிபர் தகவல்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசத்தில் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த 6ஆயிரத்து 957 குடும்பங்களில் 697 குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் விதவைகளாகியுள்ளதாக கண்டா வளை உதவி அரசாங்க அதிபர் என்.சத்திய சீலன் தெரிவித்துள்ளார்.

இதில்தாய் மற்றும் தந்தையை இழந்த 150 குடும்பங்கள் உள்ளதுடன் தாயுடன் குழந்தைகள் உள்ள 456 குடும்பங்கள் இருப்பதாகவும் 340 குடும்பங்களில் தலா ஒருவர் உடல் உறுப்புகளை இழந்துள்ளதாகவும் உதவி அரசாங்க அதிபர் கூறியுள் ளார்.

பிரதேசத்தில் உள்ள 99 வீதமான குடும்பங்களின் வீடுகள் யுத்தம் காரணமாக அழி வடைந்துள் ளன. எனினும் அவற்றில் பல குடும்பங்கள் மீள்குடியேற்றப் பட்டுள்ளதாகவும் மீள்குடியேற்றப்பட்டுள்ள குடும்பங் களுக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ள கூடாரங்கள் மற்றும் கூரைகளுக்கு பயன் படுத்தும் பிளாஸ்ரிக் கூரைகள் போதுமான தல்ல எனத் தெரிவித்துள்ள உதவி அரசாங்க அதிபர், மழைக் காலத்தில் மக்கள் அவற்றில் வசிக்க முடியாத நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## இளையதம்பி (உடையார்) சண்முகம்

(முன்னாள் உரிமையாளர், E.S ஸ்ரோர்ஸ்,ஆலியெல,பதுளை)

குப்பிளானை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சண்முகம் 15.09.2010 அன்று காலமானார்.



அன்னார் ஞானமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான இளையதம்பி தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சீனித்தம்பி-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் நல்லபிள்ளை, வீரபாகு ஆகியோரின் அன்புச் சகோதரனும் விவேகானந்தனின் (ஜேர்மனி) அன்பு மைத்துனரும் நேசராணி, புஸ்பராணி (பிரான்ஸ்),இந்திராணி (பிரான்ஸ்), ஜெயராணி(லண்டன்), பத்மராணி, சக்தி தாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோ கத்தர், யாழ்.பல்கலைக்கழ கம்), அருணகிரிநாதர், அமரர்களான சிவசுப்பிரமணியம், சுத்தானந்தன் மற்றும் ரவிச்சந்திரன் (அப்பன்கடை), பிரவலா ஆகியோரின் அன்பு மாமனாரும் அருளரசன், அருள்பிரியன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக் கழகம்), அருள்மைந்தன், சுஜா,சுதி,விதுர்சன், சுவேதா, அர்ச்சஜன், திலக்சன், ஆதுஷா, சிவதர்சன், ரஜீவன், கபிலன் சிவதாரணிகா, அரணியா, அர்ச்சனா, அர்தீஸ், அர்வினி ஆகியோரின் பா மிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (19.09.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் குப்பிளான் காடா கரம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குப்பிளான்.
0214910742

தகவல்:
ச.சக்திதாசன்(மகன்)
நா.கணேசலிங்கம்
(மருமகன்)

(சி/1060)

## செலான் வங்கியினரின் நடமாடும் சேவை

(பூநகரி)

கிளிநொச்சி நகரில் கடந்த மாதம் தமது பிரதான கிளையைத் திறந்துள்ள செலான் வங்கி நிர்வாகத்தினர் மக்களின் நன்மை கருதி கிராம ரீதியாக நடமாடும் சேவையை நடத்தி வருகின்றனர்.

இந்த நடமாடும் சேவை வாரந்தோறும் திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளியில் விசுவமடு நகரிலும், புதன்கிழமைகளில் பூநகரி நகரிலும் அதே நாள் மாலையில் முழங்காவில் நகரிலும் நடைபெறுமென அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-84)

## வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

(பூநகரி)

பூநகரி வாடியடியில் இருந்து நாகதேவன் துறைக்குச் செல்லும் தார்வீதி கடந்த முப்பது வருடங்களாக எவ்வித திருத்த வேலையும் செய்யப்படாத நிலையில் குன்றும் குழியு மாகக் காணப்படுவதால் போக்குவரத்துச் செய்ய முடியாத அவல நிலையில் இருப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ் வீதி வழியாகவே பூநகரியின் முக்கிய விவசாயக் கிராமங்களான கறுக்காய்த்தீவு, ஞானிமடம், சித்தன்குறிச்சி, செட்டியாகுறிச்சி ஆகிய பகுதிகளுக்குச்செல்ல வேண்டியுள்ளது.

பெரும்போக விதைப்பு ஆரம்பமாக விருப்பதால் இவ்வீதியால் விவசாய உள்ளீடு களைக் கொண்டு செல்வதில் உள்ள சிரமங்களை உணர்ந்து உரிய அதிகாரிகள் வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை வித்துள்ளனர். (ஸ்ரீ-84)




வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கும் முகமாக பிக்கப் வாகனம் ஒன்றை வடமாகாண ஆளுநர் ஜீ. ஏ.சந்திரசிறி கடந்த வெள்ளிக் கிழமை ஆளுநர் செயலக வளாகத்தில் வைத்து முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பிரதிப் பணிப்பாளரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

## உள்நாட்டில் உற்பத்திசெய்யும் மருந்துகளுக்கு உறுதிச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

உள்நாட்டு மருந்துப் பொருட்களை உயர்தரத்துடன் உற்பத்தி செய்யும் நோக்கில் மருந்துப் பொருட்களின் தர நிர்ணயத்திற்கு உறுதிச் சான்றிதழ் அளிக்கும் நடைமுறைக்கு உட்படுத்தப்படும் என நாவின்ன பண்டாரநாயக்க ஆயுர்வேத பரிசோதனை நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி எஸ்.என். ஒபயசேகர தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு மருந்துப் பொருட்களை உலகம் முழுவதும் பிரபல்யப்படுத்தும் நோக்கில் அவற்றில் அடங்கியுள்ள பதார்த்தங்கள் தொடர்பாக விஞ்ஞான ரீதியாக உறுதிப் படுத்துவது இதன் நோக்கமாகும்.

இந்த ஆராய்ச்சிக்காக தனியார் நிறுவனங்களினதும் உள்நாட்டு வைத்தியர்களினதும் ஆதரவைப் பெற்றுக்கொள்ள சுதேச வைத்தியத்துறை எதிர்பார்த்துள் ளது.

உலகியல் பல்வகை உயிரினங்களைக் கொண்டுள்ள பத்து நாடுகளில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அவர் நாட்டில் உள்ள சுமார் 70 சதவீதமான தாவரங்கள் மூலிகைக்கு பயன்படுத்தக்கூடியவை எனவும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# யாழில் விவசாய அபிவிருத்திக்கு

# வித்திடும் கண்காட்சி - 2010


கண்காட்சியைப் பார்வையிடும் மாணவர்கள்...

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், விவசாய ஆராய்ச்சி, கால் நடை உற்பத்தி சுகாதார திணைக் களம், வானிலை அவதான நிலையம், கமநல அபிவிருத்தித்திணைக்கள விவ சாயிகள் கூடம் ஆகியன இணைந்த வளா கத்தில் " சந்தைப் பொருளாதாரத்தை நோக்கிய சூழல் பாதுகாப்புடனான விவ சாய உற்பத்தி " என்னும் தொனிப் பொரு ளில் விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி-2010 நேற்று முன்தினம் 18ஆம் திகதி ஆரம்பமானது. இன்று திங்கட்கிழமை வரை காலை 8.30 தொடக்கம் மாலை 5.30 மணிவரை நடைபெறும்.

ஆரம்ப நிகழ்வு வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் க.சுப்பிரமணி யம் தலைமையில் நடைபெற்றது. இக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவா னந்தா கலந்து கொண்டார்.

விலங்கு வேளாண்மை ஆராய்ச் சித் திணைக்களம்,கமநல அபிவிருத் தித் திணைக்களம் விவசாயத்திணைக் களம் என்பவற்றில் அவர்களின் துறை சார்ந்த பொருட்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டன. ஆராய்ச்சித் திணைக் களத்தில் புதிய புதிய விதை பொருட் கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள் ளன.

குறிப்பாக குறைந்த காலத்தில் அதிக விளைச்சலைத் தரக்கூடிய கத்தரி, பாகல், வெண்டி மற்றும் நெல் என்பன காட் சிப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று கமநல அபிவிருத்தித்திணைக்களத்தில் விவசாயச் செயற்பாட்டிற்கு தேவை யான இயந்திரங்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. சூரிய சக்தி மூலம் இயங்கும் மோட்டார், அரிவுவெட்டும் இயந்திரம்,கையால் சூடடிக்கும் கருவி , விசைத்தெளி கருவி, உயர்ந்த மரங் களுக்கு மருந்துதெளிக்கும் கருவி, மாதிரி விவசாயக் கிராமம் என்பன இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதைத்தொடர்ந்து விவசாயத் திணைக்களத்தின் தோட்டத்தில் பல் வேறுபட்ட விவசாயப்பொருட்களும் அவற்றை உற்பத்தி செய்து அதிக விளைச் சலைத் தரக்கூடிய முறைகளும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

**19 இன வாழைகள்**

கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள ஒரு பகுதியில் 19வகையான வாழை மரங்கள் உள்ளன. கதலி,கப்பல், இதரை, யானை,கவன்டிஸ்,செவ்வாழை, மொந் தன், மருத்துவ வாழை என அடுக்கிக் கொண்டே போகலாம். சொட்டு நீர்ப் பாசன முறையின் மூலம் குறைந்த நிலப்பரப்பில், நோய் எதுவும் வராத வாறு வாழைச்செய்கை பண்ணப்பட் டுள்ளது.

இவற்றில் எவ்வகையான வாழையை உற்பத்தி செய்து பயன் தரலாம் என்ற முடிவினை விவசாயிகளே மேற்கொள்ள வேண்டும் என விவசாயத் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் சிவகுமார் கூறி னார்.

விவாயிகள் விரும்பினால் வாழைக் குட்டிகளைப் பெற்றுத்தருவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் உறுதியளித் தார்.

**நீண்டு வளர்ந்துள்ள புடோல்**

செயற்கைப் பசளைகள் எவையும் விசிறாது, கிருமிகளின் தாக்கத்தி லிருந்து பாதுகாக்கப்பட்டு மிக நீண்டு வளர்ந்துள்ளது. புடோல் மற்றும் பாகற் காய்களுக்கு மேல் பொலித்தீன் உறை போடப்பட்டுள்ளது.

இதன் மூலம் கிருமித்தாக்கத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் என்கின்றனர் விவசாய பீட மாணவர்கள்.

**இனக்கவர்ச்சிப் பொறி**

கிருமிகளின் தாக்கத்திலிருந்து பொலித்தீன் உறை பாதுகாப்பது அளிப்பது போன்று இனக்கவர்ச்சிப் பொறியை பயன்படுத்துவதன் மூல மும் கிருமிகள் மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்த முடியும் என்கின்றனர் விவசாய ஆராய்ச்சியாளர்கள். மஞ்சள் நிறம் என்பது ஆண் பூச்சிகளை கவரக்கூடியது.

இதனால் மஞ்சள் நிறத்திலான இனக் கவர்ச்சிப்பொறியை பயன்படுத்து வதால் அதற்குள் பூச்சிகள் போய் மாட் டிக்கொள்கின்றன.

இதன் மூலம் பூச்சித் தாக்கத்தில் இருந்து பயிர்கள் பாதுகாக்கப்படு கின்றன.

**விசிறல் நீர் வழங்கும் செயற்பாடு**

விவசாயக்கண்காட்சியில் வைக் கப்பட்டுள்ளவற்றில் மிளகாய், வெங் காயம் போன்றனவும் மிக முக்கியமா னவை. இவை பாத்திகள் அமைக் கப்பட்டு அதில் பயிரிடப்பட்டுள்ளன. இதனால் நீர்ப்பாசன முறை மூலம் நீர் பாய்ச்சத் தேவையில்லை. குறைந்த இடத்தில் அதிகளவு விளைச்சலைப் பெற முடிகிறது. நோய்த்தாக்கத்தில் இருந்தும் பாதுகாக்கப்படுகிறது.

இதனால் சூழலும் பாது காக் கப்படுகிறது.

இதேபோன்று ஏனைய பயிர்களில் விளைச்சல் குறித்த விளக்கங்கள் செயற்கைப்பசளைகளை செலவின்றி தயாரிக்கும் முறைகள், தாவர இனங் கள், நல்லின மரக்கன்றுகள் என்பன வும் இக்கண்காட்சியில் காணப்படு கின்றன.

இதேபோன்று விலங்கு வேளான் மைக்கண்காட்சியில் கால்நடைகளை பராமரிக்கும் முறை, சிறந்த இனங்களை உருவாக்குதல் போன்றனவும் சிறந்த விளக்கங்களுடன் காண்பிக்கப்படு கின்றன. நேற்று முன்தினம் ஆரம்ப மான இக்கண்காட்சி இன்றுடன் முடி வடைகின்றது. இக்கண்காட்சியை சென்று பார்வையிடுவதன் மூலம் விவ சாயிகள் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**தீபன்–பாலா**

---

விவசாயிகள் மற்றும் மாணவர்களுக்கு இது போன்ற விவசாயக் கண்காட்சிகள் அவசி யமானது . அனுபவ ரீதியான விவசாய முறையையே விவசாயிகள் மேற்கொள்கின் றனர். அதனால் ஆராய்ச்சி மூலம் பெறப்பட்ட முடிவுகளை கொண்டு இங்கு விவசாயம் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இவற்றை இனி எனது பண்ணையிலும் செய்கை பண்ணுவேன்.

இதைவிட வடக்கில் பேராதனை பூங்காவைப் போன்ற ஒன்று அவசியம் தேவை. அரிய வகை தாவரங்களை பாதுகாத்தல், புதியவற்றை அறிமுகப்படுத்தல், குறைந்த செலவில் அதிக விளைச்சலைத் தரக்கூடிய விதைகள் அறிமுகப்படுத்தல் போன்றன செய்யப்படவேண்டும்.

கண்காட்சியை விட மேலதிகமாக விவாயிகளுக்கு விளக்கமளிக்கும் மாநாடுகளை மேற்கொண்டு விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் பயன்பெறக் கூடிய வகையில் புதிய திட்டங்களை மேற்கொள்ளவேண்டும்.

ரி.எ.ஜெகநாதன்
மாறன் பண்ணை ,
முழங்காவில்.



---




இந்தக் கண்காட்சியூடாக அதிகளவான வாழை இனங்களைப் பாதுகாப்பதைக் கண்டு கொண்டேன்.மிகவும் அருமையான செயற்பாடு. இது போன்று சகல விவசாயி களும் தமது தோட்டத்தில் வாழை இனங்களைப் பயிர் செய்ய முன்வரவேண்டும்.

இங்கு உள்ளூர்ப் பாரம்பரியங்கள் பாதுகாக்கப்படுகின்றன.விசிறல் முறை மூலம் விவசாயம் செய்து நீரைச் சேமிக்கும் செயற்பாடு மிகவும் பயனுள்ளதாகக் காணப்படு கின்றது. சர்வதேச சேதன விவசாய சம்மேளனத்தின் இலங்கைப் பிரதிநிதியான ரஞ்சித் டி சில்வா கிராமிய சேதன விவசாய ஊக்குவித்தல் செயற்பாட்டிற்கு முன்னின்று உழைப் பவர். இதற்கென யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டு தடவைகள் விவசாயிகள் மற்றும் விவசாயத்துறை சார்ந்த அதிகாரிகளை அழைத்து சர்வதேச ரீதியிலான கருத்தரங் குகள் மற்றும் பயிற்சிகளை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரஞ்சித் டி.சில்வா
பணிப்பாளர்,கிராம சேவைகள் நிலையம், கலக,கண்டி.

---

# உள்ளூர் பாரம்பரியங்கள் பாதுகாக்கப்படும் விவசாயம்



ஆராய்ச்சி மூலம் கண்டு பிடிக்கப்பட்ட புதிய புதிய மரக்கறி விதைகள் வைக்கப் பட்டுள்ளன. இவற்றின் மூலம் வீட்டுத்தோட்டத்தை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

எங்குமில்லாதவாறு கத்தரி,வற்றாளை போன்ற இனங்கள் உள்ளன. இது எமது விவசாயிகளுக்கு மட்டுமல்ல வீட்டுத்தோட்டத்தை மேற்கொள்வோருக்கும் பயனு டையதாகவுள்ளது. இதைவிட சிறுதானியங்களும் அவற்றை பாதுகாக்கும் வழி முறை களும் நன்கு புலனாகக் கூடியவகையில் விளக்கப்படுத்தப்படுகின்றன. இந்தக் கண் காட்சி விவசாயிகளுக்கு மட்டுமின்றி எம்மைப்போன்ற மாணவர்களுக்கும் நன்மைய ளிக்கக்கூடியதாகவுள்ளது. இதனை ஏற்பாடு செய்த அனைவருக்கும் எனது நன் றிகள்.

ரி.வினோதர்சினி
வவுனியா விவசாயக் கல்லூரி (2009-2011)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்



## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதம்)

முன்னேற்றத்தின் முதல்படியில் நிற்பவர்களைப் பார்த்து அதைப்போல தாங்களும் வரவேண்டும் என்று ஆசைப்படும் தனுசு இராசி நேயர்களே!

நீங்கள் மற்றவர்களின் குறைகளை நாசூக்காக சுட்டிக் காட்டுபவர்கள். கவர்ச்சிகரமான பேச்சால் மற்றவர்களை அசர வைப்பீர்கள். பிரியப்பட்டவர்களுக்கு வலியச்சென்று உதவி செய்வீர்கள். பிரியமில்லாதவர்களின் பக்கம் தலை வைத்துக்கூடப் படுக்கமாட்டீர்கள். தெளிவான சிந்தனை உங்களுக்கு இருப்பதால் மற்றவர்களுக்கு ஆலோசனை சொல்வதில் வல்லவர்களாக விளங்குவீர்கள்.

புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் குருவின் வக்ரம் தொடர்வதால் ஆரோக்கியத்தில் சற்று அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை அமையும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் திடீர் திடீரென மாறும். அதற்காக மனக்கிலேசம் கொள்ள வேண்டாம்.

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே அஷ்டமாதிபதி சஞ்சரிக்கிறார். விரயாதிபதியோ, இலாப ஸ்தானத்தில் வீற்றிருக்கிறார். எனவே, வரவைக்காட்டிலும் செலவு கூடும். வருமானம் போதுமானதாக அமையுமா? என்பது சந்தேகம்தான். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. இயல்பான வாழ்க்கையில் இனிமை கூட முறையாக குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

அத்தோடு, அருகிலிருப்பவர்களையும் அனுசரித்துச் சென்றால்தான் திருநாளைப் போல, தித்திப்பான நாட்களாக வரும் நாட்களை காண இயலும். மாத தொடக்கத்தில் பத்தில் சனியும், சூரியனும் இணைவது அவ்வளவு நல்லதல்ல. தொழில் பங்குதாரர்கள் உதவிக்கரம் நீட்டுவதாகச் சொல்லி ஏமாற்றம் அடைய வைப்பர். எதிரிகளின் பலம் கூடும். இந்த நேரத்தில் இறைவழிபாடு உங்களுக்குக் கைகொடுத்து உதவும். இடமாற்றம், வீடு மாற்றங்களை மேற்கொண்டால் எதிரில் வரும்பிரச்சினைகளைதீர்த்துக்கொள்ள இயலும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

எதிர்வரும் 26ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறப்போகிறார். இது ஒரு வழிக்கு நன்மைதான். தொழில் ஸ்தானம் பலப்படுவதால், இதுவரை ஸ்தம்பித்துப் போயிருந்த தொழில் மீண்டும் இயங்கத் தொடங்கும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை முன் நின்று நடத்தும் எண்ணம் மேலோங்கும்.

**புத – சுக்ர சேர்க்கை!**

பத்துக்கு அதிபதி புதனும், பதினொன்றுக்கு அதிபதி சுக்ரனும் ஒன்றாக இணைந்து எதிர்வரும் ஒக்ரோபர் 13 ஆம் திகதி முதல் துலாம் இராசியில் சஞ்சரிக்கப் போகிறார்கள். இதன் விளைவாக, கொடுக்கல்கள் – வாங்கல்கள் ஒழுங்காகும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிக்கு புதிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பெற்றோர்களின் ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும்.

மாதம் முழுவதும் மகிழ்ச்சியாக அமையவும், நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்க்கவும், முறையாக சர்ப்பசாந்திகளைச் செய்து கொள்வது நல்லது. வளர்ச்சி அதிகரிக்க வைரவர் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் எதையும் யோசித்துச் செய்ய வேண்டிய மாதமாகும். இராசிநாதன் பலம் இழந்திருப்பதால் வைத்திய செலவுகளை சந்திக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். கணவன், மனைவிக்குள் பாசம் குறையாமலிருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உங்கள் குடும்ப விடயங்களைப் பக்கத்து வீட்டாரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். ஆனைமுகப் பெருமானும், ஆறுமுகப் பெருமானும் இருக்கும் ஆலயங்களுக்கு சென்று வழிபட்டால், அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து சேரும்.



## மகரம்

(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள் )

நிம்மதி கிடைக்க வேண்டுமானால், நிதானத்தோடு செயல்பட வேண்டுமென்று சொல்லும் மகர இராசி நேயர்களே!

நீங்கள் பிடிவாத குணத்திற்கு சொந்தக்காரர். பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று சொல்லுவீர்கள். பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்க்கை நடத்தாமல், வாழ்க்கையே பிரச்சினையாக இருக்கிறது என்று சொல்பவர்களின் பட்டியலில் இடம்பிடிப்பவர்கள். இருந்தாலும், எதற்கும் கவலைப்படமாட்டீர்கள். உறவினர்களைக் காட்டிலும் உடனிருக்கும் நண்பர்களே உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர்.

இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் சனி, அஷ்டமாதிபதி சூரியனுடன் இணைந்திருப்பதால் இழப்புகள் ஏற்படாமல் இருக்க எதிலும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது. உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. அப்படியே பலன் கிடைத்தாலும் அது வேறு வழியில் செலவாகிவிடும்.

விரய ஸ்தானத்தில் சப்தமாதிபதி சஞ்சரிப்பதால் வாழ்க்கைத்துணை வழியே நம்பிச் செயல்பட்ட காரியங்களில் பெரும் விரயம் உருவாகலாம். இந்த ஏற்ற இறக்க நிலை மாற, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் அதிகரிக்க சிவாலய வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள். தாராபலம் பெற்ற நட்சத்திரத்தில் சீரான வாழ்வு தரும் சிவனை வழிபட்டால், ஜோரான வாழ்வு அமையும். சொல்லையும் செயலாக்கி காட்ட இயலும்.

வக்ர குருவின் ஆதிக்கம் பலப்படும் இந்த நேரத்தில் உடன்பிறப்புகள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்ட மறுக்கலாம். கடன் சுமை கூடாமல் பார்த்துக் கொள்வது நல்லது. வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதன் மூலம் விரயங்களை மாற்றிக் கொள்ள இயலும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி வரை புதன் கன்னி இராசியில் சஞ்சரிக்கும் நேரத்தில் விபரீத இராஜ யோகம் செயல்படப் போகிறது. ஆனால், அந்த யோகத்தை முழுமையாக செயல்படுத்த விடாமல் கூட இருக்கும் சனி சிறுசிறு தடைகளைக் கொடுக்கலாம். அதற்கு பரிகாரமாக சனிக்கிழமை தோறும் எள் தீபம் ஏற்றிகாகவாகனத்தானை வழிபாடு செய்யுங்கள். செல்வநிலையும் எதிர்பார்த்தபடி உயரும். செல்வாக்கும் மேலோங்கும்.

**புத – சுக்ர சேர்க்கை காலம்!**

எதிர்வரும் ஒக்ரோபர் 13ஆம் திகதி துலாம் இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, தொழில் முன்னேற்றம் ஏற்படும். கிளைத்தொழில்கள் தொடங்க கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உயரதிகாரிகளால் நன்மைகள் வந்து சேரும். சொத்துக்களை வாங்க மற்றும் விற்க உகந்த நேரமிது.

இம்மாதம் இனிய மாதமாக அமைய சனிக்கிழமை விரதமும், சஞ்சலம் தீர்க்கும் சனி பகவான் கவசமான "கருநிறக் காகம் ஏறி காசினி தன்னைக் காக்கும்" என்ற கவசப் பாராயணமும் உங்களுக்கு கைகொடுத்து உதவும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் இனம்புரியாத கவலை

### சிவல்புரி சிங்காரம்

மேலோகங்கலாம். உறவினர்களை உதாசீனப்படுத்தாதீர்கள். கணவன், மனைவிக்குள் கருத்தொருமித்து வாழ பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மாதத்தின் மையப் பகுதியில் பணப்பற்றாக்குறை அகலும். ஆனைமுகப் பெருமான் மற்றும் ஆதரவு தரும் குரு வழிபாட்டை நட்சத்திர பலம் பெற்ற நாளில் செய்து வந்தால், நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். (தொடரும்)



Sond நிறுவனத்தினால் வறுமைக்கோட்டுக்குட்பட்ட பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் மற்றும் மாற்று வலு கொண்டோருக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பருத்தித்துறை பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் Sond நிறுவன திட்ட இணைப்பாளர் க.செந்தூரன் ஆரம்ப உரை நிகழ்த்துவதையும், பருத்தித்துறை பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் பயனாளிகளுடன் உதவித்திட்டம் பற்றி உரையாடுவதையும், கராஜ் தொழிலுக்கான உபகரணத்தை கையளிப்பதையும், பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் தையல் தொழிலுக்கான உபகரணத்தை பெண் தலைமைத்துவக் குடும்ப பயனாளி ஒருவருக்கு வழங்குவதையும், இந்நிகழ்வில் கலந்து கொண்ட பயனாளிகளையும் படங்களில் காணலாம்.

## சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்படலாம்

### சிங்கள ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தினால் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்படலாம் என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் விமல் வீரவன்சவினால் இயக்கப்படுகின்ற இணையத்தளம் ஒன்றே இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

நான்கு குற்றச்சாட்டுக்களின் பேரில் குற்றவாளியாக இணங்காணப்பட்டுள்ள சரத்பொன்சேகாவின் தீர்ப்பு ஜனாதிபதியின் உறுதிப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதி நாடு திரும்பியதன் பின்னர் இதற்கான இறுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கூறப்படுகிறது.

இந்த நிலையில் அவருக்கான தண்டனைக் காலமும் அதிகரிக்கப்படலாம் என அந்த இணையத்தளத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க இரண்டாவது நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் மேன்முறையீடுசெய்ய விருப்பதாகதெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## ரணிலுக்கும் சஜித்துக்கும் இடையில் முறுகல் நிலை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசாவிற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு மாநாட்டில் இருவருக்கும் இடையில் காரசாரமான விவாதம் இடம்பெற்றதாக சிறிகொத்த வட்டாரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அரசாங்கத்தின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயற்பட்டு வருவதாக இருவரும் ஒருவரை மாறி ஒருவர் குற்றம் சுமத்திக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் அரசாங்கத்தின் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாக ரணில் விக்ரமசிங்கவும் 18 ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பான கட்சியின் நடவடிக்கைகள் அரசாங்கத்தின் ஒப்பந்த அடிப்படையில் நடைபெற்றதாக சஜித் பிரமேதாஸவும் குற்றம் சுமத்திக் கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

சிறிகொத்தாவில் கூட்டம் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் பாரியளவிலான குண்டர் கும்பலொன்று வெளியில் சஞ்சரித்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கட்சித் தலைவரையும் ரவி கருணாநாயக்கவையும் பாதுகாப்பதற்காக இந்தக் கும்பல் சிறிகொத்தாவிற்கு எதிரில் பிரசன்னமாகியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# எனக்குப் பிறகு நீயும்.. தி.மு.க வும் தனி அறையில் தழுதழுத்தாரா கருணாநிதி

"வைகோ என்பவன் இன்னும் உயிரோடு இருக்கிறான்!" -இந்த வார்த்தைகளை வைகோ உச்சரித்தபோது தொண்டர்களின் கைதட்டலால் காஞ்சிபுரமே கிடுகிடுத்தது!

காஞ்சிபுரத்தில் ம.தி.மு.க. மாநாடு என்று அறிவிக்கப் பட்டதுமே, ஊரின் அனைத்துச் சுவர்களையும் வளைத்து விளம்பரங்களாக எழுதித் தள்ளினார் ஒன்றிய இளைஞர் அணிச் செயலாளர் வெங்கடேசன். ஆனால், அவர் சாராயம் விற்ற வழக்கில் கைதானார். "திரும்பிய பக்கமெல்லாம் ம.தி.மு.க. கொடியையும், அண்ணாவையும், வைகோவையும் வரைந்து வைத்தார் வெங்கடேசன். ஸ்டாலின் இங்கு வந்து சென்ற இரண்டாவது நாளே அவர் மீது சாராய கேஸ்!

ஓய்வுபெற்ற ஹெட்கான்ஸ்டபிளின் பையனான வெங்கடேசன், ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார். அவர் இருப்பது சின்னக் காஞ்சிபுரம். ஆனால், பக்கத்தில் உள்ளபாலுச் செட்டி சத்திரத்தில் சாராய வழக்கு போட்டிருக்கிறார்கள். செல்லமுத்து என்பவரை சாராயம் விற்றதாக கைது செய்து... அவருக்கு வெங்கடேசன் சப்ளை செய்ததாக வழக்கு. கையில் விலங்கு போட்டு அவரை நீதி மன்றத்துக்குக் கொண்டு வந்துள்ளார்கள். இப்போது



எல்.கணேசன்

காஞ்சிபுரம் கிளைச் சிறையில் அவர் இருக்கிறார்..." என்கிறார் ம.தி.மு.க-வின் துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா,

பொலிஸ், மாவட்ட நிர்வாகம் இடைஞ்சல் கொடுப்பது பற்றி கேள்விப்பட்ட வைகோ, "அதிகமான தொல்லை கொடுத்தால், அண்ணா சமாதிக்குப் போய் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன்..." என்று அறிவித்த பிறகுதான் அமைதியானார்களாம் அதிகாரிகள்.

மாநாட்டு நாளான 15ஆம் திகதி காலையில் இருந்தே காஞ்சி நகருக்குள் கூட்டம் குவிய... உண்மையில் வைகோவுக்கு உற்சாகம். "எல்லாரும் கைக் காசை செலவுபண்ணி வந்திருக்காங்க. மழை மட்டும் வராமல் இருந்தால் போதும்..." என்று சொல்லிக் கொண்டு இருந்தாராம் வைகோ. மாலை நெருங்க நெருங்க ... காஞ்சிபுரம் முழுக்க மனிதத் தலைகளாகக் காட்சி அளித்தது. இதில் இன்னோர் ஆச்சர்யம், எங்கே திரும்பினாலும் அண்ணா படங்கள் மட்டுமே இருந்தன. வைகோ படம் இல்லை. "வைகோ தனது படத்தை வைக்கக் கூடாது என்று சொல்லிவிட்டார்..." என்று காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் பாலவாக்கம் சோமு சொன்ன போது, வைகோ சிரித்தார்.

மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசிய செந்திலதிபன் முதல் வைகோ வரை அனைவருமே முதல்வர் கருணாநிதி மீதுதான் கடும் தாக்குதல் நடத்தினார்கள்.

"நாடாளுமன்றத்தில் தமிழ் இனத்துக்காக மட்டுமே வைகோ குரல் கொடுத்தார். 11 பிரதமர்களின் முன்னால் சிங்கத்தைக் குகையில் சந்திப்பதைப்போல பிடரியைப் பிடித்து உலுக்கியவர் வைகோ. அந்தக் காலத்தில் தமிழ்நாட்டைப் பார்த்து டெல்லி அஞ்சியது. ஆனால், சோனியாவுக்கு பயம் போய்விட்டது. அதற்குக் காரணம் கருணாநிதிதான். அவர் ராஜாவையே மிஞ்சிய ராஜ விசுவாசியாக மாறிவிட்டார்! இந்த அடிமை மனோபாவமும், குடும்பப் பாசமும் இருக்கும் வரை கருணாநிதியால் இந்த இனத்துக்கும், நாட்டுக்கும் எந்த நன்மையும் இல்லை!" என்று செந்திலதிபன் சொன்னதற்குப் பின்னால், மைக் பிடித்த நாஞ்சில் சம்பத்தின் பேச்சு மொத்தக் கூட்டத்தையும் சிரிப்பு மழையால் நனைய வைத்தது.

"இந்த மாநாட்டை நடத்தக் கூடாது என்று தாசில்தார் ஒருவர் தடுத்திருக்கிறார். உன்னைத் தூண்டிவிடுவது யார், குன்றத்தூர் குள்ளனா?" என்று அவர் சொன்ன போது ஏதோ புரிந்தாற் போல் பலத்த விசில்.

"ஒரு குடும்பமே அனைத்துப் பதவிகளையும் பங்கு போட்டுக் கொள்கிறது. ஆனால், அந்த இயக்கத்துக்காக உழைத்த டி.ஆர்.பாலு உதாசீனப்படுத்தப் படுகிறார். நான் ம.தி.மு.க-வுக்கு மட்டுமல்ல... நொந்துபோன தி.மு.க-காரர்களுக்கும் கொள்கை பரப்புச் செயலாளர் தான். 'இப்படியே போங்க சம்பத்! அப்பதான் இவங்களை ஒழிக்க முடியும்' னு தி.மு.க-காரனே என்னிடம் சொல்றான் ஏன்னா...

பணம் ஒரே இடத்தில் குவிகிறது. ஆள்பவர் ஏழையாக இருந்தால் தான், ஆளப்படுபவன் பணக்காரனாக முடியும் என்பார்கள். அண்ணா ஏழையாக இருந்தார். மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்று நினைத்தார்.

இன்று இன்ஜினியரிங் கல்லூரி இல்லாத மந்திரி உண்டா? கருணாநிதி குடும்பம் நிலத்தை, வானத்தை, கடலை வளைத்து விட்டது. அடுத்த தேர்தலிலும் அவர்கள் ஜெயித்தால் கறிக் கடையைக்கூட எவனும் நடத்த முடியாது. இன்னார் பெயரில் கறிக் கடை என்று ஆரம்பித்து, இன்னாரை கல்லாப்பெட்டியில் உட்கார வைத்துவிடுவார்!" என்று சில பெயர்களைச் சொல்லி முடித்தபோது விசில் பறந்தது.

இரவு 8.45 மணிக்கு மைக் பிடித்தார் வைகோ. முதல்வர் கருணாநிதியின் ஆட்சியில் தொடங்கி... முள்ளி வாய்க்காலில் நடந்த படுகொலை சம்பவங்களை அவர் விவரித்து முடிப்பது வரை மொத்தக் கூட்டத்தையும் தனது வார்த்தைகளால் கட்டிப்போட்டி ருந்தார். "நான் தமிழ்நாட்டு மக்களின் ஊழியன். இந்த நாட்டுக்காக... மொழிக்காக உழைப்பவன். கட்சி சார்பற்ற பொதுமக்களுக்கும் சேர்த்து நான் முன்வைக்கும் கேள்வி ஒன்றே ஒன்றுதான், "ஒரு குடும்பத்தின் ஆதிக்கமா... தமிழ்நாட்டின் ஜனநாயகமா? எது தேவை?" என்ற ஒரு கேள்வியின் அடிப்படையில் இந்தத் தேர்தல் நடக்கப் போகிறது..." என்பதை






"நாடாளுமன்றத் தேர்தலில் எங்கள் கட்சிக்கு ஒரே ஒரு சீட் அதிகம் வேண்டும். கணேச மூர்த்திக்குத் தாருங்கள்" என்றேன். உடனே கலைஞர், "அதெல்லாம் முடியாது. அதுக்கு மேல் கொடுக்க முடியாது!" என்று சொல்லிவிட்டு அந்த அறையைவிட்டு வெளியே போனார்.

பிறகு திடீரென்று நின்றவர், "எனக்குப் பிறகு நீதான்யா...உன் கட்சிதான்யா தி.மு.க-வா இருக்கும்!" என்று தழுதழுத்த குரலில் சொன்னார். நான் பதறிப் போனேன். "ஏன் அண்ணே, இப்படி எல்லாம் பேசுறீங்க! நீங்க 100 வருஷம் இருப்பீங்கண்ணே!" என்று சொன்னேன். அன்றைக்கு என்னை சமாதானப்படுத்துவதற்காக அப்படிச் சொன்ன பசப்பு வார்த்தைகள் அவை. எனவே, முக்கியஸ்தர்களுக்கு மட்டும் இதைச் சொன்னேன். கட்சித் தொண்டர்களுக்கு இதை முதல் தடவையாகச் சொல்கிறேன்!" என்ற வைகோ...

"இன்றைக்குச் சொல்கிறேன். கலைஞர் அவர்கள் 100 ஆண்டுகள் வரை நல்ல நலத்துடன் ... திடத்துடன் வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

ஆனால், உங்களுக்கு முன்னால் உங்களது குடும்ப அரசியல் நொறுங்கிப் போகும். உண்மையான தி.மு.க-வாக ம.தி.மு.க-தான் இருக்கும். உமர் முக்தாரை தூக்கிலேற்றும் போது, அவரது மூக்குக் கண்ணா டியை எடுத்துக்கொண்டு ஒரு சிறுவன் ஓடுவான். அதைப்போல, அண்ணாவின் இலட்சியத்தை நிறைவேற்ற நான் இருப்பேன்.

## முத்துக்குமாரனின் குடும்பம் வை.கோவுக்கு கொடுத்த வாள்

பகிரங்கமாக அறிவித்த வைகோ, இந்த மாநாட்டில் ஒரு சம்பவத்தைச் சொன்னார். "2004ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், நான் சிறையில் இருந்து வெளியே வந்த நாள். அன்று இரவில் கலைஞரை சந்தித்தேன். "உங்களிடம் தனியாகப் பேச வேண்டும்" என்று அவரைத் தனி அறைக்கு அழைத்துச் சென்றேன்.

**ஜூனியர் விகடன்**

11ஆம் பக்கம் பார்க்க...

# ஈழத்தவர் வரலாறு

41

# 7.வன்னிச் சிற்றரசுகள்


## (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

### வன்னிக் குடியேற்றங்கள்

வன்னிப்பிரதேசத்தின் ஆதிக்குடிமக்கள் நாகர் ஆவர். இயக்கர்களையும் அவர் வழி வந்த வேடுவ் மக்களையும் வன்னிப் பிரதேசம் கொண்டிருந்துள்ளது.யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளத்தின் பயன் பாட்டை உணராத எமது மூதாதையினரான பண்டைத்தமிழ் மக்கள் கூட்டத்தினர் தமக்குப் பரீட்சயமான தரைமேல் வடிகாலமைப்பைக் கொண்ட நதிகள் பாய்கின்ற வன்னிப் பிரதேசத்தை ஆரம்பத்தில் தமது வதிவிடங்களாகக் கொண்டிருந்தனர் எனக் கொள்ளலாம்.

பண்டைநாளில் வன்னிப்பிரதேசத்தின் குடித்தொகை மிகவதிகமாகவும், செறிவாகவும் இருந்துள்ளதென்பது பல அறிஞரின் முடிவு. பாழடைந்து கிடக்கின்ற வன்னிக் குளங்களினதும் கிராமங்களினதும் எண்ணிக்கை இவ்வாறான முடிவினை எடுக்க வைத்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள எண்பது சதவீதமான கிராமப்பெயர்கள் சிங்கள நாமவழி தழுவியனவாகவிருக்க, வன்னியின் தொண்ணூறு சதவீதமான கிராமப் பெயர்கள் முற்றுமுழுதான தமிழ்ப் பெயர்களாகவுள்ளன. வன்னிப் பிரதேசங்கள் சைவ


திருக்கோணேஸ்வரம்

மக்களாலும், தமிழ் மக்களாலும் விரும்பிக் குடியேற்றப்பட்ட பிரதேசங்களாகவுள்ளன.

வன்னிப்பிரதேச மக்கள் வன்னியர் என வரலாற்று நூல்கள் வரையறுக்கின்றன. வன்னியர்கள் பண்டைக்காலத்தில் தென்னிந்தியாவில் வாழ்ந்து வந்த அக்கினி குலத்தைச் சேர்ந்த ஆரியரல்லாத வகுப்பினர் ஆவர். அவர்கள் மறத்தொழில் புரியும் வீரர் பரம்பரையில் தோன்றியவர்கள். வன்னியர் அக்கினிகுலச் க்ஷத்திரியரென்றும், இவர்கள் யாகாக்கினியிலிருந்து தோன்றின ரென்றும் கூறப்படுகிறது.

இவை எவ்வளவு தூரம் ஏற்புடையன வென்பது கற்றோருக்குப் புரியும்.வன்னிப் பிரதேசம் என்று வடவிலங்கை ஏன் அழைக்கப்படுகிறது என்பதற்கு இரு இயல்பான விளக்கம் தரமுடியும். இப்பிரதேசம் கடும் வறட்சியான பகுதி.வன்னி என்றால் வறட்சி. நெருப்புப் போல இங்கு கடும் வறட்சியான பகுதி. வன்னி என்றால் வறட்சி. நெருப்புப் போல இங்கு கடும் வெப்பம் நிலவும். வன்னி வெப்பம் என்பது இதனையே குறிக்கும். மேலும் வன்னிமரங்கள் முன்பு நிறைந்த பிரதேசமாதலால் வன்னிப்பிரதேசம் எனப்பட்டதெனலாம்.மரங்களை அடிப்படையாகக் கொண்டு வன்னிப் பிரதேசத்துக் கிராமங்கள் புளியங்குளம், பூவரசங்குளம்,மருதன்குளம் எனப்பலவாறு பெயரிடப்பட்டுள்ளன. காரணப்பெயர்கள் வன்னிப்பிரதேசத்தில் பரவலாகவுள்ளன. எவ்வாறாயினும் வன்னிப் பிரதேசத்தில் குடியேறி வாழ்ந்த அனைவரும் வன்னியர் எனப் பட்டனர்.

வன்னியில் இரு தடவைகளாக வன்னியரின்குடியேற்றம் ஏற்பட்டதென்று யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. இவற்றுள் முதற் குடியேற்றம் குளக்கோட்டன் காலத் தில் ஏற்பட்டதென்றும், இரண்டாம் குடியேற் றம் பாண்டியநாட்டில் வந்த எண்பதொன்பது வன்னியரின் வருகையோடு ஏற்பட்டதென்றும் கூறும். தமிழ்நாட்டிலிருந்து ஈழத்திற்கு வந்த அடங்காப்பற்று என வழங்கிய வன்னியை அடக்கி அங்கு அதிகாரமும் பெற்ற வன்னியரின் வரலாற்றைப் பொருளாகக் கொண்டு வையாபாடல் என்றொரு நூலேயுள்ளது.

கி.பி. 436 ஆம் ஆண்டளவில் குளக்கோட்டன் என்னும் மன்னன் கோணேஸ்வரர் ஆலயத் திருப்பணியை நிறைவேற்ற வந்தான்.திருப்பணியை நிறைவேற்றி அந்த ஆலயப் பணிவிடைகளை நிறைவேற்றுவதற்கும், கோணேசலிங்கத்திற்குப் பூசனை புரிவிப்பதற்கும் செலவுவரவுகளுக்காக ஏழு நாடுகளின் வயல் நிலங்களையும் தோப்புகளையும் ஏற்படுத்தி அவற்றிற் பயிரிட்டு வருமானம் செலுத்தும்படி வன்னியர்களை அழைப்பித்துக் குடியேற்றித் தன்நாட்டிற்கு மீண்டான் என வைபவமாலை குறிப்பிடுகிறது. அது தொடர்ந்து வன்னியரின் குடியேற்றத்தைப் பின்வருமாறு கூறுகிறது.

"அந்நாள் முதல் அவ்வருமானங்களால் ஆலயப் பணிவிடைகளும், அந்தணர் அக்கிரகாரங்களும், மடங்களும் சப்பிரமமாகச் சிறந்து வந்தன. சில காலத்தின் பின் குளக்கோட்டு மகாராசன் தேகவியோகமானான். அதன்பின் மேற்கூறிய ஏழுநாடுகளிலும் பயிர்க் குடிகளாயிருந்த வன்னியர்கள் மிகவும் பெருகியிருந்தார்கள்.

பாண்டி நாட்டிலிருந்து ஐம்பத்தொன்பது வன்னியர்களும் வந்து அவர்களுடன் கூடினார்கள். குடிசனங்கள் வரவரப் பெருகி அதிகப்பட்டுக் கொண்டமையால் அரசாட்சியின்றி வெகுவித கலகங்கள் பலகாலம் நேரிட்டன. அவ்வேழு நாடுகளின் வருமானங்களிலும் கோணேசர் கோயிலுக்குச் செல்வனவேயன்றிக் கண்டி நாட்டரசருக்கு அந்நாடுகளினால் யாதொரு நயமுமில்லாமையாற் கண்டி நாட்டு அரசர்கள் அந்நாடுகளை பாராமுகம் பண்ணிவிட்டார்கள். அக்காலத்திலே சந்திர வன்னியனும் வேறு அநேக குறுநில மன்னரும் ஒருவரின் பின்னொருவராகத் தோன்றியழிந்த பின் அவ் வன்னியர்கள் அனைவரும் ஒத்திணங்கி தங்கள் சாதியிற் தலைப்பட்ட ஏழு பேரைத் தெரிந்து அவ்வேழு நாடுகளுக்கும் தலைவராக்கி அவர்களுக்கு கீழ் அமைந்திருந்தார்கள்.

வன்னியர்கள் ஆண்டு வந்ததினால் அவ்வேழு நாடுகளும் வன்னி நாடுகளெனப் பெயர் பெற்றன.அது முதல் அவ்வேழு தலைவரின் சந்ததியார் சுயேட்சைப் படி ஆண்டு வந்தார்கள்." (தொடரும்)

# சர்வதேச ஆராய்ச்சிக்கான மத்திய நிலையம் ஹோமாகமவில் அமைக்கப்படவுள்ளது

(கொழும்பு)

சர்வதேச ஆராய்ச்சிகளை மேற்கொள்ளக்கூடிய மத்திய நிலையமொன்றை அமைப்பதற்கு ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தேசிய விஞ்ஞான மன்றத்துடன் இணைந்து இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதுதொடர்பாக பல சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஆரம்ப பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

புதிய மத்திய நிலையம் ஹோமாகம பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

அங்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இந்த ஆராய்ச்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நானோ தொழில்நுட்பம் மற்றும் சர்வதேச ரீதியாக விருத்தியடைந்துள்ள எலக்ரோனிக் தொழில்நுட்பம் தொடர்பாக இந்த ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-4)

# தள்ளாடி இராணுவ முகாம் 54ஆவது படைப்பிரிவாக தரமுயர்வு

மன்னார் பிராந்தியத்திற்கான இராணுவத் தலைமையகமாகச் செயற்பட்டு வந்த தள்ளாடி முகாம் தற்போது 54 ஆவது படைப் பிரிவாகத் தரமுயர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

1965 ஆம் ஆண்டளவில் மன்னார் தள்ளாடிப் பகுதியில் இராணுவத்தினரால் சிறிய முகாமாக அமைக்கப்பட்டு பின் படைத் தலைமையகமாகவும் பிராந்தியத்திற்கான கட்டளைத்தளமாகவும் செயற்பட்டு வந்த நிலையில் தற்போது 54 ஆவது படைப் பிரிவாக தரமுயர்த்தப்பட்டிருக்கின்றது.

இதனையடுத்து முன்பு தள்ளாடி படைத் தலைமையகத்தின் நிர்வாகக் கட்டமைப்பிற்கு உட்பட்டிருந்த 215 ஆவது படைப்பிரிவு மற்றும் 212 ஆவது படைப்பிரிவு ஆகிய படைத்தளங்களும் தரமுயர்த்தப்பட்டிருப்பதுடன் இதுவரை காலமும் தள்ளாடி படைத் தலைமையகத்தின் கட்டளையிடும் அதிகாரியாகக் கடமையாற்றி வந்த பிரிகேடியர் மைத்திரி டயஸ் 54 ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரியாகக் கடமையாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மன்னார் தள்ளாடி இராணுவ முகாம் 54ஆவது படைப்பிரிவாக தரமுயர்த்தப்பட்பட்டிருப்பதை அடுத்து இது வரையிலும் 212 ஆவது படைமுகாமாக செயற்பட்டு வந்த தளம் 541ஆவது பிரிகேட்டாகவும் 215ஆவது படைமுகாமாக செயற்பட்டு வந்த தளம் 542ஆவது பிரிகேட்டாகவும் தரமுயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



ஓலைச்சுவடிகளை பேணுதலும் பாதுகாத்தலும் தொடர்பான கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா மற்றும் சென்னை மத்திய செம்மொழி ஆராய்ச்சி நிறுவன உறுப்பினர் கலாநிதி ஜெ.அரங்கராஜ் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பேராசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நீக்கத்தால் ஒரு மாதத்தில் 2 1/2 இலட்சம் டொலர் இழப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி சலுகையை நீக்கிய பின்னர் இலங்கை 2 இலட்சத்து 50 ஆயிரம் டொலர் பெறுமதியான ஏற்றுமதிக் கட்டளைகளை ஏற்கனவே இழந்து விட்டதாக இலங்கையின் பிரபல ஏற்றுமதி நிறுவனமான தயா குழும நிறுவனங்களின் தலைவர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 15 ஆம் திகதி வரை ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி சலுகை மூலம் இலங்கையிலிருந்து சுமார் 2 ஆயிரம் பொருட்களை ஐரோப்பிய சந்தைக்கு சுங்க வரிகள் ஏதுமின்றி ஏற்றுமதி செய்ய முடிந்தது.

ஜி.எஸ்.பி பிளஸ் சலுகை நீக்கப்பட்ட பின்னர் ஐரோப்பிய சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் அனைத்துக்கும் 9.6 வீத வரியைச் செலுத்த வேண்டியுள்ளது.

ஜி.எஸ்.பி பிளஸ் விவகாரத்தினால் இரண்டாவது கட்டமாக வேலை இழப்புகள் ஏற்பட் டுள்ளன.

ஆடை தயாரிப்பு, மட்பாண்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் ஏற்றுமதிக்கட் டளைகள் குறைவடைவதால் வேலையிழப்புகள் ஏற்படுமெனவும் இதனால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும். நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 40 வீதமானவை ஆடை ஏற்றுமதியாகும். இதில் 60 வீதமானவை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அனுப்பப்பட்டன.இதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்தால் மட்டுமே இந்த இழப்புகளை தவிர்க் கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## சற்சங்க நிகழ்வு

சுழிபுரம் வடக்கு யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் ஒவ்வொரு மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தன்றும் மாலை 3 மணி தொடக்கம் 5 மணிவரைக்கும் சமய விழுமியங்கள், கிரியைகள் செய்யப்படுவதன் நோக்கம் பற்றிய கலந்துரையாடல் நடைபெறுகிறது.

இதில் கலந்து கொண்டு பயன் பெற விரும்புவோர் அனைவரும் சமுக மளிக்குமாறு யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாசடாலை செயலாளர் ஆ.கனகரத்தினம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பொன்சேகா சிறையிலடைக்கப்பட்டால் அனோமாவிற்கு பாராளுமன்ற ஆசனம்

## ஜே.வி.பி. ஆலோசனை

(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டால் அவரது பாரியார் அனோமா பொன்சேகாவிற்கு பாராளுமன்ற ஆசனமொன்றை வழங்குவது குறித்து ஜே.வி.பி. கவனம் செலுத்தி வருகின்றது.

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டால் தற்போது தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டுள்ள டிரான் அலசை பதவி விலகுமாறு கோரி அந்த வெற்றிடத்திற்கு சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமாவை நியமிப்பது குறித்து ஜே.வி.பியின் சிரேஷ்ட தலைவர்கள் உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய சரத்பொன்சோவிற்கு எதிராக விசாரணைகளை நடத்திய இரண்டாவது இராணுவ நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பை வெளியிட்டிருந்தது. இராணுவத் தளபாட கொள்வனவுகளின் போது பொன்சேகா ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாக இரண்டாம் இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இதன்படி சரத் பொன்சேகாவிற்கு மூன்றாண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிதி மஹிந்த ராஜபக்ஷவினால் இந்தத் தண்டனை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி இந்தத் தண்டனையை அங்கீகரிக்காவிட்டால் சரத்பொன்சேகா சிறைத் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது வெளிநாட்டுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி நாடு திரும்பியதன் பின்னர் சரத் பொன்சேகா விவகாரம் குறித்து தீர்மானிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடற்படை தலைமைக் காரியாலய கட்டடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவை விளக்கமறியலில் தடுத்து வைப்பது குறித்து இராணுவத்தினர் கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# எனக்குப் பிறகும் நீயும்...

9ஆம் பக்கத் தொடர்ச்சி

ஈழத் தமிழர்களுக்காக உயிர் நீத்த முத்துக்குமாரின் குடும்பத்தினர் எனக்கு வீரவாள் ஒன்றைக் கொடுத்தார்கள். அது தங்க வாளோ, வெள்ளி வாளோ அல்ல. உண்மையான வாள். கூர்மையாக இருந்தது.

இதை ஓர் அடையாள மாக எடுத்துக் கொள்கிறேன்" என்று முடித்தபோது... தொண்டர் கள் அனைவரும் முறுக்கேறி இருந்தார்கள்!

*வைகோ சொல்வது நிஜமா?*

ம.தி.மு.க.அவைத் தலைவராக இருந்து விலகி, இப்போது தி.மு.க-வில் இருக்கும் எல்.கணேசன் என்ன சொல்கிறார்?"நல்லா இருக்குதுய்யா கதை! 'தனக்குப் பிறகு நீதான்!' என எனக்குத் தெரியாமல் கலைஞர் வைகோவிடம் சொன்னாராமா? கலைஞர் அப்படிப்பட்ட வார்த்தைகளை ஏன் சொல்லணும்? 93ஆம் ஆண்டு தி.மு.க-வைவிட்டுப் பிரிந்த நாங்கள், 10 வருடங்களுக்குப் பிறகு கலைஞரிடம் 2004இல் கூட்டணிக்காக வந்தோம். 10வருட வசைப் பாடல்களை மறந்துவிட்டு அந்த நேரத்தில் கலைஞர் அப்படிச்சொல்லி இருப்பாரா என்ன? "தி.மு.க-வுக்கு இவர்தான் அடுத்து" என உயில் எழுதும் பழக்கம் கலைஞருக்குக் கிடையாது. தனக்குப் பின்னால் யார் என்பதை கலைஞர் தன்வாயால் இன்று வரை சொல்லவில்லை. ஆனால், அதனை அடுத்தடுத்த செயல்களால் விளக்கி விட்டார். இன்றைக்கு கலைஞரின் பாதிச் சுமை ஸ்டாலினுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டு இருக் கிறது. அப்படி இருக்க, கலைஞரின் வாத்தைகளாக வைகோ ஏன் இப்படிப் பேசுகிறார் என்பது புரியவில்லை!" என்றார் எல்.ஜி.

இரா. சரவணன்
பா.ஜெயவேல்

# 20.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 1187 - சலாதின் ஜெருசலேம் மீதான தாக்குதலை ஆரம்பித்தான்.
- 1519 - பேர்டினண்ட் மகலன் 270 பேருடன் ஸ்பெயின் நாட்டின் சான்லூகர் டி பரமேடா என்ற இடத்தில் இருந்து உலகைச் சுற்றிவரப் புறப்பட்டார்.
- 1633 - சூரியன் பூமியைச் சுற்றுவதாகத் தெரிவித்த கலிலியோ கலிலி கத்தோலிக்க மதகுரு மாடத்தின் முன்னால் விசாரிக்கப்பட்டார்.
- 1697 - ஒன்பதாண்டுப்`போரை (1688 - 1697) முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின், புனித ரோமப் பேரரசு டச்சுக் குடியரசு ஆகியவற்றிற்கிடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது.
- 1847 - நீலப் பென்னி அஞ்சல் தலையை பிரித்தானியா மொரீசியசில் வெளியிட்டது.
- 1854 - பிரித்தானியா மற்றும் பிரெஞ்சுப் படையினர் கிறிமியாவில் இடம்பெற்ற போரில் ரஷ்யர்களைத் தோற்கடித்தனர்.
- 1857 - கிழக்கிந்தியக் கம்பனிக்கு விசுவாசமான படைகள் டல்லியைக் கைப்பற்றினர். சிப்பாய் எழுச்சி முடிவுக்கு வந்தது.
- 1878 - த ஹிண்டு இதழ் வெளியிட ஆரம்பிக்கப்பட்டது.
- 1932 - மகாத்மா காந்தி பூனே சிறையில் உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.
- 1942 - உக்ரேனில் நாசி ஜெர்மனியர்கள் இரண்டு நாட்களில் மொத்தம் 3 ஆயிரம் யூதர்களைக் கொன்றனர்.
- 1945 - மகாத்மா காந்தியும் ஜவகர்லால் நேருவும் பிரித்தானியப் படைகளை வெளியேறக் கோரினர்.
- 1966 - சேர்வெயர் 2 விண்கலம் சந்திரனை நோக்கிச் செலுத்தப்பட்டது.
- 1976 - துருக்கியில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 155 பேரும் கொல்லப்பட்டனர்.
- 1977 - வடக்கு வியட்நாம் ஐ.நாவில் இணைந்தது.
- 1979 - மத்திய ஆபிரிக்கக் குடியரசில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து பேரரசன் முதலாம் பொக்காசா பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1984 - லெபனானில் பெய்ரூட் நகரில் அமெரிக்க தூதரகத்தின் மீது நடத்தப்பட்ட தானுந்துத் தற்கொலைத் தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டனர்.
- 1990 - தெற்கு ஒசேத்தியா ஜோர்ஜியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது. இதனை எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை.
- 1993 - துருவ செயற்கைக்கோள் ஏவுகணையை இந்தியா ஏவியது.

### இறப்புகள்

- 1971 - ஜியோர்கஸ் செபெரிஸ், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி. 1900)
- 1975 - சென் ஜோன் பேர்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1887)
- 1996 - பால் ஏர்டோசு, ஹங்கேரி நாட்டுக் கணிதவியலாளர்(பி.1913)

**1993- பெண் விடுதலைக்கு போராடிய அன்னி பெசண் அம்மையார் இறந்தார். (பி.1847)**



# பகீர் கேள்வி கேட்ட பஞ்சாபி கலைஞரின் தமிழ் ரத்தம் எங்கே

"என் இளமை விடியும் முன்னரே முடியும் என்று யாருக்குத் தெரியும்?" - வலி மிகுந்த இந்தக் கவிதை வரிகளுக்குச் சொந்தக்காரர் பேரறிவாளன்! ராஜீவ் காந்தி கொலையாளிகளுக்கு "பேட்டரி" வாங்கி கொடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட தூக்கு தண்டனைக் கைதி!



ஜக்மோகன் சிங்

19ஆவது வயதில் "ஐந்து நிமிட விசாரணை"க்காகக் காவல் துறையால் அழைத்துச் செல்லப்பட்டவர். இப்போது 39 வயதில் மரணத்தின் விளிம்பில் ஊசலாடிக்கொண்டு இருக்கிறார். அவர் சிறைக்கு சென்று 20 ஆண்டுகள்.

முடிந்துவிட்டதை நினைவுபடுத்தும் நிகழ்ச்சி கடந்த வாரம் சென்னையில் நடந்தது. தியாகு தலைமையில் நடந்த இந்த விழாவில், "மரண தண்டனைக்கு எதிரான சமூக நீதிப் போராளிகள்" அனைவரும் ஆஜர். ஆனாலும் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தவர் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஜக்மோகன் சிங்!

பத்திரிகையாளரும், மனித உரிமை அக்கறையாளருமான ஜக்மோகன் சிங் தமிழர் குறித்தும், தமிழக அரசியல் நிலவரம் குறித்தும் புள்ளி விவரங்களோடு பேசிய ஆச்சரியப் பேச்சுகள் இங்கே அப்படியே...

"உலகமே ஊமையாகி நிற்க... ஈழத்தில் ஒட்டுமொத்தத் தமிழர்களையும் கொன்று குவித்தார்கள். இன்னும் சில நாடுகள் நேரடியாகவே இலங்கைக்குப் போர் உதவி செய்தன. கொடுமையிலும் கொடுமையாக, அத்தனையையும் நாமும் வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இனிமேலாவது, அடுத்தவனின் வேதனைகளை வேடிக்கை பார்ப்பதை விட்டுவிட்டு மனித உரிமைக்காக ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும்.

இன்று தமிழகத்தின் முதல்வராக கருணாநிதி இருக்கிறார். விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டபோது,2007 நவம்பர் 2ஆம் திகதி கருணாநிதி தன் கவிதையில், "இலங்கையிலே கொல்லப்பட்டிருக்கிற அந்த வீரன் ஒரு தமிழன். அங்கே பாய்கிற இரத்தம் என் தமிழர்களின் இரத்தம்"என்று எழுதியிருந்தார். இப்படி ஒரு கவிதை எழுதிய அவரைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதினேன். ஆனால், இன்று என் கவலை எல்லாம் "அந்த தமிழ் இரத்தம் , இப்போது அவருக்கு எங்கே போனது?" என்பதுபற்றித்தான்!

இந்த விழாவைத் தலைமையேற்று நடத்தும் தோழர் தியாகு உட்பட மரண தண்டனையில் இருந்து 25 கைதிகளுக்கு 1974இல் கருணாநிதிதான் தண்டனைக் குறைப்பு வழங்கினார். தமிழக முதலமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன்... "இனி தமிழ்நாட்டில் எவருக்கும் மரண தண்டனை அறிவிக்கப்படாது" என்று இப்போதே அறிவிக்க வேண்டும். தமிழ்நாடு சட்டமன்றம் மரண தண்டனைக்கு எதிரான ஒரு தீர்மானத்தை இயற்றி... மத்திய அரசுக்கும், குடியரசுத் தலைவருக்கும் அனுப்பி வைக்க வேண்டும்!

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமை இன்று நாடே போற்றுகிறது. அவர் ஜனாதிபதியாக இருந்த போது, "கருணை தொடர்பான கோப்புகள், பல அரசியல் கைதிகள் தொடர்பான கோப்புகள்" உள்துறை அமைச்சகத்தில் இருந்து குடியரசுத் தலைவர் மாறிகைக்கு நகர மறுத்து விட்டன. காரணம் தெரியுமா? குடியரசுத் தலைவர் அரசுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், "மரண தண்டனையை மறு திறனாய்வு செய்யுமாறு" கேட்டுக்கொண்டு இருந்தார். "நான் இந்த மரண தண்டனையை எதிர்க்கிறேன்" என்று அவர் திட்டவட்டமாகச் சொல்லவில்லைதான். ஆனால், மனிதாபிமான அடிப்படையிலேயே அவர் இதுபோல் கேட்டுக்கொண்டார்.

இந்தியாவில் மட்டும் அல்ல, உலகெங்கிலும் நூற்றுக் கணக்கானவர்கள் தூக்கு மர நிழலில் துன்புறுகிறார்கள். ஒரு மனிதனை, இன்னொரு மனிதன் கொலை செய்வது எவ்வளவு கொடூரமானதோ... அதேபோல்தான் அரசு ஒரு தனி மனிதனைத் தூக்கில் போடுவதும் தவறானது, அநீதியானது. மரண தண்டனை என்பது என்ன? கொலைக்குக் கொலை என்ற பழிக்குப் பழி வாங்கும்

[illegible]

## ஜூனியர் விகடன்

உலகில் 133 நாடுகள் மரண தண்டனையை ஒழித்து விட்டன. இந்தியாவைக் காட்டிலும் குற்றங்களின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கிற பிலிப்பைன்ஸ் நாட்டிலும் கூட இந்தக் கொலைத் தண்டனையை அண்மையில் ஒழித்து விட்டார்கள்.

ஆனால், காந்தியம் பேசும் நாம்தான் இன்னமும் மரண தண்டனையைப் பொத்திப் பாதுகாத்து வருகிறோம்" என்றார். ஜக்மோகன் சிங் உணர்ச்சிப் பிழம்பாக!

## என் இளமை விடியும் முன்னரே முடியும் என்று யாருக்குத் தெரியும் -பேரறிவாளன்

த.கதிரவன்

---

# வன்னியில் முதற்கட்டமாக ஆயிரம் புதிய வீடுகள் நிர்மாணிப்பு; 10ஆயிரம் வீடுகள் புனரமைப்பு

## வவு. அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் மீள்குடியமரும் மக்களுக்கு இந்தியா வழங்கும் ஐம்பதாயிரம் வீடமைப் புத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஆயிரம் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படுவதுடன் பத்தாயிரம் வீடுகள் புனர மைக்கப்படவுள்ள தாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸ் தெரிவித்துள் ளார்.

இதற்கமைய நிர்மாணப் பணிகள் இன் னும் இரண்டு வாரங்களில் ஆரம்பிக்கப்படு மென்றும் முதற்கட்டத்தில் ஆயிரம் புதிய வீடுகள் கொத்தணி முறையில் நிர்மாணிக் கப்படுவதுடன் பத்தாயிரம் வீடுகளைப் புனர மைத்துக்கொடுக்கவும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித் தார்.

மேலும் பத்தாயிரம் வீடுகளைத் திருத்தும் பணிகள் ஒரு வருட காலத்தில் பூர்த்தி செய் யப்படும். புதிய வீடுகளை அமைக்கும் முதற் கட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஐம்பது வீடுகள் வீதம் இருநூறு வீடுகள் நிர்மாணிக் கப்படும்.அத்துடன் ஆயிரத்து 250 வீடுகள் புனரமைப்புச் செய்யப்படும்.

இவ்வீடு நிர்மாணப் பணிகளை ஆரம் பிக்கவென இந்திய நிறுவனமொன்றின் அதிகாரிகள் இலங்கை வருவதாகக் குறிப் பிட்ட அரச அதிபர் இந்தத் திட்டத்திற்கான முழுமையான ஆளணி வளத்தை இலங்கை அரசு வழங்குவதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கான தொழில்நுட்ப உதவிகளை மாவட்டச் செயலகம் வழங்குமென்றும் இவற் றின் பணிகளைப் பொறுப்பேற்றுள்ள நிறு வனம் மேற்பார் வைகளை மேற் கொள்ளும் என் றும் அரசாங்க அதி பர் கூறினார்.



இவ்வீடமைப்புத் திட்டத்தை முன்னெ டுக்கவென அர சாங்க அதிபர், பிர தேச செயலாளர் மற் றும் பிராந்திய மட்டங்கள் என மூன்று குழுக்கள் அமைக்கபட்டுள் ளன.

வீடுகளைப் புனரமைப்பதற்கென இரண்டு இலட்சம் ரூபாயும் புதிய வீடொன்றை நிர்மா ணிப்பதற்காக ஐந்து இலட்சம் ரூபாயும் வழங்கப்படுமெனவும் நிர்மாணப் பணிக ளுக்கான வரைபு ஆவணங்கள் தயாரிக்கப் பட்டுக் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அர சாங்க அதிபர் தெரிவித்தார்.

(ஶ்ரீ-2)

---

# ஜயலத் எம்.பி. ஜெனிவா பயணம்

(கொழும்பு)


ஜெனீவா நகரிலுள்ள சர்வ நாடாளு மன்ற சங்கத்தின் மனித உரிமைக் குழு முன்னிலையில் ஜனநாயக தேசிய கூட்ட மைப்பின் தலைவர் சரத் பொன்சேகா சார் பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கலந்துகொள்ளவுள்ளார்.

சர்வ நாடாளுமன்ற சங்கத்தின் செயலா ளர் நாயகம் அன்டர்ன் பீ.ஜோஸ் ஜனினால் டாக்டர் ஜயவர்த்தன விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் அங்கு செல்லவுள்ளார்.

இந்நிலையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி இந்த விசாரணை யில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜய லத் ஜயவர்த்தன கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஶ்ரீ-2)

# சூரியனை ஆராய இந்தியா முயற்சி; புதிய தொலைநோக்கி அமைக்க திட்டம்



சூரியனின் அமைப்பை மிக நுட்பமாக ஆய்வு செய்ய, சூரிய சக்தியால் இயங்கும் உலகின் மிகப் பெரிய தொலைநோக்கியை, இந்தியா தயாரிக்க உள்ளது. மிகப் பிரமாண்டமான இந்தத் தொலைநோக்கி, ஜம்மு - காஷ்மீர் மாநிலம் லடாக்கில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் தொலைநோக்கிக்கு தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவி செய்வதற்காக, உலகளவில் விலை மனுக் கோரப்பட்டுள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வு மையம், ஆரியபட்டா அறிவியல் ஆய்வு நிறுவனம், டாடா அடிப்படை ஆய்வு மற்றும் பல்கலைக்கழக மையம் ஆகியவையும், சூரியசக்தியால் இயங்கும் தொலைநோக்கி அமைக்கும் திட்டத்தில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன. இவற்றை ஒருங்கிணைத்து செயற்படுத்தும நிறுவனமாக பெங்களூரில் உள்ள இந்திய வானியற்பியல் நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

சூரியக் குடும்பத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள நட்சத்திரம் சூரியன் ஆகும். இதன் எடையில் 75 சதவீதம் ஐதரசனும் 23சதவீதம் ஹீலியமும்,2சதவீதம் ஒட்சிசன், காபன்,நியோன், இரும்பு உள்ளிட்ட கனமான தனிமங்கள் உள்ளன. சூரியனை ஆய்வு செய்ய பெங்களூரில் உள்ள இந்திய வான் இயற்பியல் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

சூரிய சக்தியால் இயங்கும் தொலைநோக்கி 150 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கண்ணாடியிலான இரண்டு மீற்றர் குறுக்களவு கொண்ட தொலைநோக்கியை வடிவமைத்து,தயாரித்து 'பொருத்தப்பட வேண்டும் என விலை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.சூரியக் கதிர்கள் செங்குத்தாக படும் படி எளிதாக திரும்பும் வகையில் தட்டையான கண்ணாடி லென்ஸ் தொலைநோக்கியில் பொருத்தப்பட்டிருக்கும்.

இந்தத் தொலைநோக்கியின் உதவியால், சூரியனின் வரலாற்றை முழுமையாக அறிந்துகொள்ளமுடியும்.

இத்தொலைநோக்கி அதிக குறுக்களவும், அதிக பரப்பளவும் கொண்டதாக இருக்க போவதால், ஒரு நொடிக்கு அதிக சூரிய ஒளியை கிரகித்துவிடும்.சூரியனின் கதிர்களை அதிகமாக கிரகிப்பதால் ஆய்வாளர்கள் தெளிவாகவும் துல்லியமாகவும் ஆய்வு முடிவுகளை கண்டறியமுடியும். (ஸ்ரீ-2)



கம்போடியாவிற்கு சென்றுள்ள இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டில், சீம்ரீப்பில் அந்நாட்டு துணைப்பிரதமர் சம்டெக் சவுபியாவை சந்தித்தபோது ஒருவருக்கொருவர் வாழ்த்துத் தெரிவித்துக்கொண்டனர்.

# அனைத்துக்கட்சிக் குழுவினர் இன்று காஷ்மீருக்கு பயணம்

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் வன்முறை நீடித்து வருகிறது. பொலிஸ் துப்பாக்கி சூட்டில் 3 பேர் பலியானார்கள். அங்கு அமைதி ஏற்படுத் துவது பற்றி ஆய்வு செய்ய அனைத்து கட்சி குழு இன்று ஸ்ரீநகர் செல்கிறது.

காஷ்மீர் மாநிலத்தில் கடந்த ஜூன் மாதம் ஆம் திகதி கலவரம் வெடித்தது. நேற்று முன்தினம் 100 நாள் ஆகிவிட்ட நிலையில் இதுவரை அங்கு அமைதி திரும்பவில்லை.

கலவரக்காரர்கள் தினமும் இராணுவத்தினர் மீது கல் வீசித் தாக்குவது, கட்டடங்களுக்கு தீ வைப்பது போன்ற வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கலவரத்தை அடக்க ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டாலும் அமைதி திரும்பவில்லை.

இதற்கிடையே அனைத்துக் கட்சிக் குழு இன்று காஷ்மீருக்கு செல்கிறது. இந்தக் குழுவை அனுப்புவது என்று பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் சமீபத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இக்குழுவில் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் முலாயம்சிங் யாதவ், டி.ஆர்.பாலு, தம்பித்துரை உட்பட 35 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் இன்று தனி விமானத்தில் ஸ்ரீநகருக்கு செல்கிறார்கள். காஷ்மீர் பள்ளத்தாக்கு மற்றும் ஜம்முவில் பல்வேறு இடங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்கிறார்கள். இதன்போது பல்வேறு தரப்பினரிடம் பேசி கருத்துக்களை கேட்டு அறியவுள்ளனர்.

அதன் அடிப்படையில் டில்லி திரும்பியவுடன் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அதையடுத்து மன்மோகன் சிங் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுப்பார் என்று மத்திய அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)



உத்தரப் பிரதேசத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி சர்ச்சைக்குரிய நிலம் குறித்த தீர்ப்பு வெளியாக இருப்பதால் அயோத்தியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

# தி.மு.க.வில் இணையும் பேச்சுக்கே இடமில்லை

## சரத்குமார் தெரிவிப்பு

(தூத்துக்குடி)

தி.மு.க.வில் இணைவது என்ற பேச்சுக்கே இடமில்லை. சமத்துவ மக்கள் கட்சி தொடர்ந்து செயற்படும் என அக்கட்சி யின் தலைவ் ஆர். சரத்குமார் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி சார்பில் முப்பெரும் விழா தூத்துக்குடி பால விநாயகர் கோயில் தெருவில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இவ்விழாவில் சரத்குமார் உரைநிகழ்த்துகையில்,

தமிழகத்தில் காமராஜர் ஆட்சி அமைய வேண்டும் என்ற எண்ணத்தோடு சமத்துவ மக்கள் கட்சி செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. தமிழக மீனவர்களைப் பாதுகாக்க உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையில் உள்ள தமிழர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை ஒரு குழுவை அனுப்பி கண்காணிக்க வேண்டும்.

சரத்குமார் தி.மு.க.வில் இணைந்து விடுவார் என்று கூறுகிறார்கள். அந்தப் பேச்சுக்கே இடமில்லை. உணர்ச்சியோடு இந்த



இயக்கத்தை நடத்தி வருகிறோம். கூட்டணி குறித்து கட்சியின் பொதுக்குழு முடிவு செய்யும். சமத்துவ மக்கள் கட்சி தொடர்ந்து செயற்படும். வெற்றி காணும் என்று அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்

## காஷ்மீரில் வன்முறை நீடிப்பு

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் மீண்டும் வன்முறை வெடித்ததில் நேற்று முன்தினம் 2 பேர் உயிரிழந்ததுடன் 19 பேர் காயமடைந்தனர்.

கடந்த ஜூன் மாதம் 11 ஆம் திகதி தொடங்கிய கல்லெறி ஆர்ப்பாட்டம் கடந்த சனிக்கிழமை 100 ஆவது நாளை எட்டியது. இதற்கு இதுவரை 98 பேர்பலியாகி உள்ளனர். பாரமுல்லா மாவட்டத்தில் பட்டாண் பகுதியில் மசூதியில் இருந்து வெளியே வந்தவர்கள் ஸ்ரீநகர் - பாரமுல்லா தேசிய நெடுஞ்சாலையில் மறியலில் ஈடுபட முயன்ற பாதுகாப்புப் படையினர் மீது கல்லெறி நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதையடுத்து நடந்த துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் நால்வர் காயமடைந்தனர்.

தெற்கு காஷ்மீர் அனந்நாக் மாவட்டத்தில் 10 வயதுச் சிறுவன் மரூப் அகமது நாத் என்பவர் கடந்த 13 ஆம் திகதி காணாமல் போயுள்ளான். ஆர்ப்பாட்டத்தின் போது பாதுகாப்புப் படையினர் துரத்தியதில் அவன் ஆற்றில் விழுந்தாகக் கூறப்படுகிறது.

அவனது சடலம் ஜீலம் ஆற்றிலிருந்து கடந்த சனிக்கிழமை கண்டெடுக்கப்பட்டது. ஊரடங்கு உத்தரவையும் மீறி அவனது சடலத்துடன் நாத்போரா என்ற இடத்தில் ஆயிரக்கணக்கானோர் திரண்டனர்.

நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே பாதுகாப்புப் படையினர் சுட்டதில் ஒருவர் இறந்ததுடன் 15 பேர் காயமடைந்தனர். இந் நிலையில் இப்பகுதியில் சமாஜ்வாதிக் கட்சியின் உள்ளூர் தலைவர் வீட்டுக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தீ வைத்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர் சனிக்கிழமை உயிரிழந்தார்.தெற்கு காஷ்மீரில் ஷோபியான் மாவட்டத்தில் பிஞ்ஜோரா கிராமத்தில் பொலிஸ்காரர் ஒருவரின் வீடு தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.ஸ்ரீநகரில் கடும் வன்முறை காரணமாக கடந்த 19 ஆம் திகதி முதல் ஊரடங்கு உத்தரவு பிறப் பிக்கப்பட்டது. அத்துடன் கடந்த திங்கட்கிழமை முதல் காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது. (ஸ்ரீ-2)



# உரும்பிராய் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் ஆலய
# புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா
# சிறப்புமலர் – 20.09.2010

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசியுரை



விநாயகர் அடியார்களுக்கு, உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் புதிதாக அமைக்கப்பட்ட திருத்தேர் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

பழைமையும், பெருமையும் வாய்ந்த இவ்வாலயம் உரும்பிராய் மக்களின் தனித்துவத்தைப் பேணுவதாகவும், வேண்டுவார் வேண்டுவதை இவ்வாலயத்தில் ஈயும் பொருட்டு இவ்வாலயத்தில் எல்லாவற்றுக்கும் காரண காரியராக விளங்கும் விநாயகப் பெருமான் கருணாகர விநாயகராக் எழுந்தருளி உள்ளார்.

ஆலய விழாக்கள் இறைவனுடைய செயற்பாட்டை நமக்கு உணர்த்துகின்றன. இவ்வகையில் தேர்த்திருவிழா பலசிறப்புக்களை நமக்கு எடுத்து இயம்புகின்றது. இதனை அனைவரும் உணர்ந்து கொள்ளும் வகையில் சிற்பக் கலைஞர் திரு.சி.அமரசிங்கம் அவர்களினால் சித்திரவேலைப் பாடுடன் கூடிய தேர் இன்று உருவாக்கப்பட்டிருப்பது இவ் ஆலயத்துக்கும் இவ்வூருக்கும் பெருமையைத் தருவதாகும்.

இப்புண்ணிய காரியத்தைச் செய்த திருப்பணிச் சபையினரையும் ஊர்மக்களையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.அனைத்தும் சிறப்பாக நடைபெற்று எல்லோருக்கும் விநாயகருடைய அன்பு கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

"வாழ்க கலை! வளர்க நம் சமயப்பணிகள்"

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குரும்கா சந்நிதானம்.

## ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன் ஞானகுரு வாணி பதம் நாடு



எமது குலதெய்வமாகிய உரும்பிராய் பரத்தைப்புலம் ஸ்ரீ கருணாகரப்பிள்ளையார் கோயில் சித்திர தேர் வெள்ளோட்டவிழாவும் ரப்பிரதிஷ்டையும் 20.09.2010 திங்கட்கிழமை நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சி.

சகல காரிய சித்திகளுக்கும் எல்லோராலும் எப்பொழுதும் போற்றப்படுபவர் விநாயகப் பெருமான். தம்மை மெய்யன்போடு வழிபடும் அடியார்களது துயர்களைந்து விக்கினங்கள் நீக்கி கனவிலும் துணை புரிபவர் சரவணத்துதித்த ஷண்முக விசாகப் பெருமானது சகோதரரான கருணாகர விக்கினேஸ்வரப்பெருமான்.

அருள்மிகு கருணாகரப் பெருமானுக்கு திருப்பணிச்சபையினரின் பெரும் முயற்சியினாலும் அடியார்களுடைய மனமுவந்த நிதியுதவிகளினாலும் உருவாக்கப்பட்ட புதிய சித்திரத்தேரினை அழகாக உருவாக்கிய சிற்பகலாமணி திரு. சி. அமரசிங்கம் ஆச்சாரியர் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

கருணாகரப் பெருமான் புதிய சித்திரத்தேரில் ஆராகணித்து அடியார்கள் குறைதீர்த்து கருணை எனும் வெள்ளை மதம் பொழிகின்ற கருணை மழைபொழிந்தருளவும், புதிய சித்திரத்தேர்ப் பணிகளில் ஈடுபட்ட திருப்பணிச் சபையினர், நிதியுதவிய அன்பர்கள் மற்றும் சகல அடியார்கள் எல்லோருக்கும் எல்லாம்வல்ல சர்வவிக்ன நிவாரக ஓங்காரரூப கருணாகரப் பெருமானுடைய திருவருள் என்றென்றும் நிறைவாகக் கிடைத்து குறைவின்றி வாழ அருள் புரிய வேண்டும் என்றும் வெள்ளோட்ட விழா இனிது சிறந்து நடைபெறவும்,

வெள்ளோட்ட விழா மலர் கருணாகரப் பெருமான் புகழ் மணம்வீசும் சுகந்த மலராகத் திகழவும் கருணா மூர்த்தியாகிய கருணாகரப் பெருமானது திருவடித் தாமரைகளைப் பூஜித்துப் போற்றி எமது நல்லாசிகளை நல்குவோமாக!


சுபமஸ்து

சிவஸ்ரீ. சபாரத்தின பரமேஸ்வரக்குருக்கள்





## ஆறு திருமுருகனின் ஆசிச்செய்தி




ஈழத்திரு நாட்டிலுள்ள பழம் பெரும் விநாயகர் ஆலயங்களில் கருணாகரப் பிள்ளையார் கோயில் மிகவும் தொன்மை வாய்ந்த ஆலயமாகும். இத்திருக்கோயில் சிறப்புப் பற்றி வரலாற்றுத்துறை சார்ந்த அறிஞர்கள் பலர் கருத்துக் கூறியுள்ளார்கள். உரும்பிராய், இணுவில் வாழ் மக்களின் குலதெய்வமாக விளங்கும் திருவருட் சிறப்புமிக்க இத்தலத்தில் சைவாகம நெறிமுறை தவறாத பூசை வழிபாடும் சமகாலச் சொற்பொழிவுக்கு முதன்மை கொடுக்கின்ற பாரம்பரியமும் அன்று முதல் இன்று வரை பேணப்பட்டு வருகிறது. சிவாச்சாரிய குருக்கள் பரம்பரையின் நிர்வகித்தல் பலநூறு வருடமாகப் பாதுகாக்கப்பட்டு வரும் இவ்வாலய வளர்ச்சியில் காலத்துக்குக் காலம் பொது மக்களின் திருப்பணிப் பங்களிப்பு நிறைவாக நிறைவேறி வருவது சிறப்புக்குரியது. ஆசிரியமணி. அ.பஞ்சாட்சரம் ஐயா போன்ற பெருமக்கள் இவ்வாலய வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்த இன்றையவளர்ச்சிக்கு எமக்கு துணை செய்த பெருமக்கள். இவ்வாலயம் தொடர்பாக வெளியிடப்பட்டநூல்கள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை. இத்திருக்கோயிலில் புதிய தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடை பெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன்.

இத்திருத்தேரை உருவாக்க அயராதுபாடு பட்டதிருப்பணித் தொண்டர்களை வாழ்த்துகிறேன், வணங்குகிறேன். கருணாகரப் பிள்ளையாரின் பழைய கட்டுத்தேர் மனத்தில் இன்றும் நிறைந்திருக்கிறது. கமுகு, வாழை, நுங்கு, இளநீ, தாளங்காய் தொங்க மாலைப் பொழுதில் செம்மண் வீதியில் நாதஸ்வர தவில்ச்சமாவுக்கு மத்தியில் தேர் ஊர்ந்து வந்த நாட்கள் மறக்க முடியாதவை. காலத்தின் மாற்றம் இன்று உறுதியான சிற்பம் நிறைந்த அழகுத்தேர் உருவாக்கப்பட்டமை, எல்லாம் வல்ல கருணாகரப் பிள்ளையாரின் பேரருள் அனைவருக்கும் நிறைவாகக் கிடைக்கப் பிரார்த்தித்து அமைகிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரைதானே"

ஆறு. திருமுருகன்,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## வாழ்த்துச் செய்தி



எமக்கெல்லாம் பெருவாழ்வு அளித்த அராலி வடக்கு இலங்கைத்தாழ்வு முருகன் இற்றைக்கு 34 வருடங்களுக்கு முன்பு எம்மை சிற்பக்கலையில் காலூன்றச்செய்து அருள் வழிகாட்டினார். உரும்பிராய் நகரில் எம்மை தேர்த்திருப்பணியில் அறிமுகப்படுத்திய பர்வதபத்தினி அம்பாளும் கருணை கூர்ந்தார். பின்பு கருணாகரப் பிள்ளையாரின் துணையினால் தேர்த்திருப்பணி செய்யும் வாய்ப்பும் கிடைத்தது. இதற்கு அமரத்துவம் அடைந்த ஆசிரியமணி பஞ்சாட்சரம் அவர்களும், அவருக்கு உறுதுணையாக இருந்த திரு. சண்முகநாதன் அவர்களும் என்னிடம் பலமுறை வந்து இப்பணியை ஏற்குமாறு கேட்டதற்கிணங்க இப்பணியை ஏற்றுக் கொண்டு செயற்பட்ட வேளையில் பெரும்பான்மையான வேலைகள் நிறைவடைந்த நிலையில் ஆசிரியமணியின் எதிர்பாராத மறைவின் பின்னர் சிறிது காலம் திருப்பணிகள் நடைபெறவில்லை.

மேற்படித் திருப்பணியை தொடர்வதற்காக அவரது வழித்தோன்றலும் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் அதிபருமாகிய திரு. அ. ஈஸ்வரநாதன் அவர்களும், எமது கிராமத்தில் சில ஆண்டுகள் கிராம உத்தியோகத்தராக இருந்த திரு. கனகநாயகம் அவர்களும் என்னுடன் தொடர்புகொண்டு திருப்பணியைத் தொடர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ததன் பொருட்டு என்னாலான அளவில் என்னுடைய குழுவினரின் ஆதரவுடனும் சிறப்புடனும் நிறைவு பெற்றுள்ள இச்சித்திரத்தேர் வெள்ளோட்டம் காணுகின்ற 20.09.2010 ஆகிய இன்றைய திருநாளில் இத்திருப்பணியில் பங்குபற்றியோர்க்கும், உரும்பிராய் வாழ்மக்களுக்கும், எனது குழுவினருக்கும் எல்லாம் வல்ல கருணாகரப் பிள்ளையாரின் அருள் கிடைத்து சீரும்சிறப்புமாக வாழ வாழ்த்தி அமைகின்றேன்.

ஸ்தபதி, விஸ்வப்பிரம ஸ்ரீ சி.அமரசிங்கம்
ஆச்சாரியார்,அராலி.

## தேவஸ்தான குரு முதல்வரின் ஆசியுரை




சைவசமயத்தின் கோட்பாட்டின்படி ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளை கடவுள் என்று போற்றுகிறோம். இப்போற்றுதலில் முதற் போற்றுதற்குரியவர் விநாயகப்பெருமான். யார் எந்தக் கருமத்தைச் செய்யப் புகுமின் முதல் வழிபாட்டிற்கும் பூஜைக்கும் உரிய விநாயகப் பெருமானை வேண்டுதல் செய்வது நமது சமய மரபாகும். அந்த வகையில் எமது முற்சந்ததியினராக ஸ்ரீ கருணாகர ஐயர் (குருக்கள்) அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட 'ஆலயமே உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலாகும். ஆலய ஆதீன அந்தணர் பரம்பரையினரும் திருப்பணிச் சபையினரும் அடியார்களும் சேர்ந்து திருப்பணிகள் உபயங்களை நடாத்தி இன்று ஆலயம் சிறப்பாக விளங்குகின்றது. இராஜகோபுரம், மணி மண்டபம் ஆகியவற்றுடன் இன்று கம்பீரமாகக் காட்சியளிக்கும் நமது ஆலயத்திற்கு ஓர்புதிய சித்திரத் தேர் செய்ய வேண்டும் என்று விரும்பி அதற்கு முதல் நிதியையும் வழங்கி ஆரம்பித்தவர் அமரர் திரு. மார்க்கண்டு செல்லத்துரை (மலேசியா) அவர்கள். அவரது குடும்பத்தினர் மூலமாகக் கொண்டமைக்கப்பட்ட நிதியை ஆரம்பமாகக் கொண்டு திருப்பணிச் சபையினரின் பெரும் முயற்சியினாலும் மற்றும் உள் ஊர்களிலும் வெளியூர்களிலும் உள்ள கருணாகரப் பெருமானுடைய அடியார்களுடைய நிதியுதவிகளினாலும் உருவாக்கப்பட்ட புதிய சித்திரத்தேர் இன்று வெள்ளோட்டம் காண்பது பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பணிக்காக அல்லும் பகலும் அயராது பணியாற்றிய திருப்பணிச் சபையாரின் நன் முயற்சி மிகவும் பாராட்டுதற்குரியது. நமது ஆலயத்திற்கு அழகுமிகு சித்திரத்தேரினை தமது கலைத்திறமையினால் உருவாக்கிக் கொடுத்த சிற்பகலாமணி திரு. சி.அமரசிங்கம் ஆச்சாரியார் அவர்களையும் பாராட்டுவதுடன் அவர்களது கலைப்பணி மென்மேலும் ஓங்கி உயர்ந்து வளர்ந்து பெருக வேண்டும் என்றும் ஆசீர்வதிக்கிறேன். இன்று நடைபெறும் வெள்ளோட்ட விழாவினைத் தொடர்ந்து 22.09.2010 புதன்கிழமை கருணாகரப் பெருமான் புதிய சித்திரத்தேரில் பவனி வந்து அடியார்களுக்கு திருவருட் காட்சி கொடுத்தருளுவார்.

இன்று நடைபெறும் வெள்ளோட்ட விழா இனிது நிறைவெய்தவும் இவ்விழாவினையொட்டி வெளிவரும்"வெள்ளோட்டவிழா மலர்" என்றும் நறுமணம் வீசும் நன்மலராக மணம் வீசவும், கருணாகரப் பெருமானுடைய திருவருட் காட்சி மூலம் அடியார்கள் சகல நலன்களும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும எனவும் கருணாகரப் பெருமான் பாதம் பணிந்து ஆசீரவதிக்கிறோம்.

சிவஸ்ரீ வைத்தீஸ்வர சபாரத்தின குருக்கள்,
தேவஸ்தான முதல்வா,
உரும்பிராய் ஸ்ரீகருணாகரப்பிள்ளையார் கோயில்.

## செயலாளரின் வாழ்த்துச் செய்தி



உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் இலங்கையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக விளங்குகின்றது. ஓங்காரமூர்த்தி ஆகிய பிள்ளையாரின் திருவடிகளை மனதிலே நினைத்தால் தொல்லை, துன்பம், துயரம் முதலானவை நீங்கப் பெற்று நல்வாழ்வைப் பெறமுடியும்.

கருணாகரப்பிள்ளையாரை வழிபடுகிறவர்கள் வாழ்க்கையில் சகல செல்வங்களையும் பெற்று நற்கதி அடைவார்கள். இதனாலேயே 'கருணாகரன் பாதம் கனவிலும் துணை செய்யும்' என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

இத்துணை பெருமை வாய்ந்த இவ் ஆலயத்தில் நடைபெறும் மகோற்சவத்தின் போது கருணாகரப்பெருமான் கட்டுத் தேரில் வாழை, கமுகு, நுங்கு, கரும்பு, இளநீர் தொங்க மாலைப் பொழுதினில் பிரபல நாதஸ்வர, தவில் சமாவின் மத்தியில் திருவீதி வருவது தனியழகே. காலத்தின் மாறுதலுக்கேற்ப 2005 இல் கருணாகரப் பெருமானிற்கு ஒரு புதியசித்திரத் தேரை உருவாக்க திருப்பணிச்சபையின் அன்றைய செயலாளர் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்களால் அராலியூர் ஸ்தபதி சி.அமரசிங்கம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தேர் வேலையை ஆரம்பிக்க மலேசியா வாழ் மார்க்கண்டு செல்லத்துரை அவர்கள் தமது குடும்பத்தின் சார்பாக ஆரம்பநிதியை வழங்கியிருந்தார். இவ்வேலைகள் தொடர்ந்து இரவுபகல் பாராது நடைபெற்று வந்ததுடன் உள்ளூர் சிற்ப வல்லுனர்களும், தென்னிந்திய சிற்பக் கலைஞர்களும் பங்கு கொண்டு சிற்பங்களை அமைத்துள்ளனர்.

தற்போது இச்சிற்பங்கள் தேரினில் சித்திரம் பேசுகின்றன. கருணாகரப் பெருமானின் திருவருளால் இன்று புதிய சித்திரத் தேர் சிறப்புற அமைந்துள்ளது. இப்பணியை நிறைவேற்ற ஒத்துழைத்த ஸ்தபதி சி. அமரசிங்கத்திற்கும் அவரது குழுவினருக்கும், வர்ண வேலைகளை அழகுறத் தீட்டிய குழுவினர்க்கும் இப்பணியில் ஈடுபட்ட அனைத்துத் தரப்பினருக்கும், வெள்ளோட்டமலர் வெளியீட்டிற்கு உதவியவர்கள், நிதி உதவிய கருணாகரன் அடியார்கள் யாவருக்கும் எல்லாம் வல்ல கருணாகரப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

"கருணாகரன் பாதம் கனவிலும் துணை செய்யும்."

அ. ஈஸ்வரநாதன்
செயலாளர், கருணாகரப் பிள்ளையார் கோயில்
திருப்பணிச்சபை, உரும்பிராய்.


சித்திரத்தேர் வெள்ளோட்ட
விழா சிறப்புற வாழ்த்துவோர்

**டனிஸ் உணவகம்**
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

**அருள் விநாயகர் தொலைத்தொடர்பு**
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

**A.S.K. தொலைத்தொடர்பு**
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

**உதயன் பான்சி**
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

**ஸ்ரார் ஹொட்டல்**
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

**வள்ளுவர் அக்கடமி**
பலாலி வீதி,
உரும்பிராய்.

**ரூபன் களஞ்சியம்**
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

**மணியம் பல்பொருள் நிலையம்**
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

**க.சுப்பிரமணியம் விளானை**
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

**சாந்தன் கூல்பார்**
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

**சண் நகைத் தொழிலகம்**
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

**சதா ஹாட்வெயார்**
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

**சு.குகானந்தன்**
கோப்பாய் றோட்,
உரும்பிராய்.

**சதா பேக்கரி**
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

**சிவசக்தி பல்பொருள் நிலையம்**
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

**கலா களஞ்சியம்**
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

**Sunmix Internet cafe**
T.P -0212223831
Palaly Road,
Urumpirai.

அச்சம் ஒரு மோசமான உணர்ச்சி. அறிவின் துணையால் அதை வெல்லுங்கள்.

-ஜே.ஸ்டீவன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கட்டியிருந்த கோவணமும் பறிபோகுதடா... தமிழா

"பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டேன். கட்டியிருந்த கோவணமும் பறிபோனது." என்ற கவிப்பேரரசு வைரமுத்துவின் வைர வரிகள்தான் எங்கள் நிலைமையை நினைக்கும் போதெல்லாம் ஞாபகத்திற்கு வருகிறது.

தமிழினத்தின் எதிர்காலம் எப்படி அமையும் என்று யாரேனும் கேட்டால் கண்ணீரைத் தவிர வேறு எதனையும் பதிலாகத் தர முடியாது. அந்தளவிற்று நிலைமை மோசமாகி வருகிறது.

முறிகண்டிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையாக புத்தபிரானுக்கு இருப்பிடம் அமைக்கப்படும் பணி நடைபெறுகின்றது.

முறிகண்டிப் பிள்ளையார் ஆலய சூழல், அங்கிருந்த இறைபக்தி, நம்பிக்கை என அனைத்தும் வெறுமையாகிப் போகும் அளவில் அந்தப் பகுதி ஆக்கப்பட்டுள்ளது.

இந்துசமயம் சார்ந்தவர்கள் தங்கள் வழிபாட்டை மேற்கொள்வதற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் முறிகண்டிப் பிள்ளையார் ஆலய சூழலில் ஹோட்டல் அமைக்கும் பணி நடந்தேறியுள்ளது.

ஹோட்டல் என்றால் அங்கு மதுவும் மாமிசமும் தாராளமாக பரிமாறப்படும். அவ்வாறாயின் முறிகண்டிப் பிள்ளையார் ஆலய சூழலின் புனிதத் தன்மையை வேரறுப்பதே இதன் நோக்கம் ஆகும்.

இத்தகைய செயற்பாட்டின் மூலம் வடக்கில் தமிழர்களின் தனித்துவமான இடங்கள் எனஎதுவும் இருக்கக் கூடாது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்ற திட்டம் அமுலாகுவதை உணர முடியும்.

அதேநேரம் வரலாற்றுப் பெருமைமிக்க இந்து ஆலயங்கள் இந்த நாட்டில் இருந்த தமிழர் ஆட்சியை சான்று படுத்துவதாகவும் இருக்கின்றது.

இதன் காரணமாக வரலாற்றுப் பெருமைமிக்க இந்து ஆலயங்களை அண்மித்து வெளத்த விகாரைகளை அமைப்பது. பேரினவாதத்தின் முக்கிய செயல் முறையாக உள்ளது.

அதன் அடிப்படையிலேயே முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தின் அருகில் வெளத்த விகாரை அமைக்கும் பணி நடைபெறுகின்றது.

இத்தகைய செயல்கள் வரலாற்றை மாற்றியமைக்கும் நோக்குடையவை. எனவே இவற்றை நிறுத்துவதற்கான முயற்சிகளை எடுப்பது தமிழ் மக்களின் வாக்குகளைப்பெற்று நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை எடுத்துக்கொண்டவர்களின் கடமையாகும்.


என்னும் இது விடயத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கவனம் செலுத்துவதாக இல்லை. அவர்களின் செயற்பாடுகள் தமிழ் மக்களுக்குச் சந்தேகம் தருவதாக மட்டுமே அமைகின்றன.

எதுவாயினும் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் சிறிதாயினும் அதன் கீர்த்தி மகத்தானது. இந்த மகத்துவம் அங்கு இருக்கக்கூடிய அமைதியான – சைவத்தன்மை வாய்ந்த ஆடம்பரமற்ற சூழமைவாலும் – அதீத இறை நம்பிக்கையாலும் உருவானதாகும்.

இதற்கு இடையூறு விளைவிப்பதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது என்பதால், இது விடயத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தலையிடுமாறு தமிழ் அரசியல் தலைமைகள் கோரிக்கை விடவேண்டும்.

இதைவிடுத்து எதைக்கண்டும் அமைதியாக இருப்பதற்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் தேவையற்றது என்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

# க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கு பயனுள்ள "இலங்கை மத்திய வங்கி" நூல்




கல்வித் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பிலே பொருளியலை ஒரு பாடமாக கற்கின்ற மாணவர்களின் மத்திய வங்கி தொடர்பான அறிவுத் தாகத்தை தீர்ப்பதற்காக வெளி வந்திருக்கும் நூலாக "இலங்கை மத்திய வங்கி" காணப்படுகிறது. 2011 இல் இருந்து புதிய பாடத்திட்டத்திற்கமைவாக பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு என தனித்துவமாக கருணாகரன் ஆசிரியரால் உருவாக்கப்பட்டதே இலங்கை மத்திய வங்கி எனும் நூலாகும்.

இந்நூலானது பொருளியலை கற்கும் மாணவர்களுக்கு மட்டுமன்றி வணிகக் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் உதவும் என்பதில் ஐயமில்லை. இந்நூலிலே இலங்கை மத்திய வங்கியின் வரலாறு தொடக்கம் மத்திய வங்கியின் கருமங்கள், குறிக்கோள்கள் தீவிரமான திறந்த சந்தை நடவடிக்கை நாணயக் கொள்கையின் இலக்கு மாறி சுட்டிகள், வட்டிவீதம் செல்வழி ஊடுகடத்தற் பொறிமுறை என பல புதிய விடயங்கள் உள்ளடங்கலாக காணப்படுகிறது. அத்துடன் இந்நூலிலே காணப்படும் பல்தேர்வு வினாக்களும் கட்டமைப்பு வினாக்களும் மாணவரின் செயற்திறனை மேலும் அதிகரிக்க கூடியதாக உள்ளது.

**செல்வி தனலட்சுமி புண்ணியமூர்த்தி**
**ஆசிரியை**
**யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

வே.கருணாகரன் ஆசிரியரால் பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அந்நூல் வரிசையிலே இந்நூலும் இணைந்துள்ளது. இந்நூலினால் பொருளியல் ஆசிரியர்கள் கற்பிக்க வழிகாட்டுவதுடன் சிறந்த கல்வியறிவை பெற விரும்பும் மாணவர்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகவும் காணப்படுகிறது.

# குடாநாட்டில் அனைத்து இடங்களுக்கும் சீரான போக்குவரத்து சேவை மேற்கொள்ளப்பட வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

குடாநாட்டின் போக்குவரத்துத் துறைக் கட்டமைப்பை பொறுத்தவரையில் 80 களின் நேரசூசி அடிப்படையில் குடாநாட்டில் அனைத்துப் பகுதிகளுக்குமான சீரான போக்குவரத்துச் சேவைகள் மேற்கொள்ளப்பட்டனவோ, அதே போன்று இன்றும் சீரான பயணிகள் போக்குவரத்துச் சேவை அனைத்துப் பகுதிகளுக்குமாக மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதே எனது நோக்கமாகும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். கோண்டாவில் இலங்கை போக்கு வரத்து சபைச்சாலை யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங் களுக்கான இ.போ.சபையின் சேவைகள் தொடர்பிலான முன்னேற்ற ஆய்வரங்கை ஆரம்பித்துவைத்து உரை யாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போக்குவரத்து பிரதி அமைச்சர் ரோஹன திசாநாயக்க இலங்கை போக்குவரத்துச் சபையிடம் தற்போது 4800 பஸ் வண்டிகள் இருப்பதாகவும் இதனை 7000 மாக அதிகரித்துக் கொள்வதே தனது அமைச்சின் நோக்கமாகும் எனக் குறிப்பிட்டார்.

வட பகுதி மக்களின் வாழ்க்கை நிலை குறித்தும் இப்பகுதி அபிவிருத்தி குறித்தும் பாராளுமன்றத்திலும் சரி வெளியிலும் சரி தொடர்ந்து குரல் கொடுத்து வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பங்களிப்புடன் வட பகுதியின் போக்குவரத் துச் சேவைக் கட்டமைப்பை தமது அமைச்சு நிச்சயமாக விருத்தி செய்யும் எனவும் இதற்கென இப்பகுதி வாழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தங்களது பங்களிப்புக்களை வழங்க முன்வர வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இதே வேளை நேற்று கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 10 சாரதிகளுக்கும் 15 காப்பாளர்களுக்குமான நியமனக் கடிதங்கள் அமைச்சர்களால் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன. (ஸ்ரீ)

# ஜனாதிபதியிடமிருந்து பொன்சேகாவுக்கு நீதி கிடைக்குமென எதிர்பார்க்கவில்லை

## அனோமா பொன்சேகா தெரிவிப்பு

ஜனாதிபதியிடமிருந்து தனது கணவருக்கு நீதி கிடைக்கும் என்று தான் எதிர்பார்க்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஜனநாயகத் தேசிய முன்னணியின் ஊடகவியலாளர் மாநாட்டி லேயே அவர் இதனைக் கூறினார்.

இந்நிலையில் மகாசங்கம் பொதுமக்கள் மற்றும் ஏனைய மதத் தலைவர்கள் சரத் பொன்சேகாவின் உரிமைகளைப் பாது காப்பதற்கு முன்வர வேண்டும் என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தனர். (ஸ்ரீ-2)

# பிரபாகணேசன் கட்சி உறுப்புரிமையை இழக்க நேரிடும் - மனோகணேசன் தெரிவிப்பு

தற்போது ஆளும் கட்சியில் இணைந்து கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் கட்சி உறுப்புரிமையை இழக்க நேரிடும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் புதன்கிழமை கட்சியின் அரசியல் பீடம் கூடி பிரபா கணேசன் தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரபா கணேசனின் கட்சி உறுப்புரிமையை ரத்து செய்வதற்காக அதிக சாத்தியம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபா கணேசனுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் விசாரணைகள் தொடர்பில் அவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் பிரபா கணேசன் இந்த நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வித பதிலையும் இதுவரையில் அளிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையின் இரத்தினக் கற்களுக்கான சர்வதேச அங்கீகாரத்தை உயர்த்த திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் இரத்தினக் கற்களுக்கான சர்வதேச அங்கீகாரத்தை உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு நட வடிக்கை எடுக்கப்படும்.

மேலும் இரத்தினக் கற்களின் தரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் 150 மில்லியன் ரூபா செலவில் உலக வர்த்தக கட்டடத்தில் புதிய ஆய்வு கூட மொன்று அமைக்கப்படவுள்ளது.

அத்துடன் உரிய தரத்தைக் கொண்டிராத இரத்தினக் கற்கள் மற்றும் தங்க ஆபரணங்களை தயாரிக்கும் இடங்களை சுற்றி வளைப்பதற்கு தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண சபை திட்டமிட்டுள்ளது. (ஸ்ரீ-7)

# சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



நமது எல்லையற்ற அறிவையும், ஆற்றலையும் உணர்ந்து எழுந்து நிற்கும் நாள் வந்தே தீரும். அந்த மாபெரும் நிகழ்ச்சியை விரைவு படுத்த நாம் அனைவரும் உதவி செய்வோம்.

நாம் பலவாக தோன்றுகிறோம்.

ஆனால், நமது உண்மை ஒன்றே. அந்த ஒன்றிலிருந்து வேறுபட்டவர்களாக நம்மை நாம் எவ்வளவு குறைவாக நினைக்கிறோமோ, அவ்வளவு நமக்கு நல்லது. அந்த முழுப் பொருளிலிருந்து (இறைவன்) நாம் வேறுபட்டவர்கள் என்று எவ்வளவு அதிகமாக நினைக்கிறோமோ அவ்வளவுக்கு துயரமும் அதிகமாகும்.

எதிர்பார்ப்பதை விட்டுவிடு என்கிறது வேதாந்தம். நீ ஏன் எதிர்பார்க்கிறாய்? உனக்கு எல்லாம் இருக்கிறது. இல்லை. இல்லை நீயே எல்லாமாக இருக்கிறாய்.

# சர்வதேச பயங்கரவாதியாக உலாவரும் புதிய பின்லேடன்



(நியூயோர்க்)

சர்வதேச தீவிரவாதி பின்லேடனுக்கு அடுத்து தற்போது புதிதாக இந்தப் பட்டியலில் வருபவர் அன்வர் அல் அவ்லாகி.இவரைப் பற்றி அமெரிக்க புலனாய்வு நிறுவனம் கூறுவதாவது, லண்டன் மற்றும் மேற்கத்திய நாடுகளில் எங்கேனும் தாக்குதல் நடைபெறுமாயின் அதன் பின்புலமாக இந்த அவ்லாகி தான்இருப்பார். இவருடைய தந்தை ஏமன் நாட்டைச் சேர்ந்தவர்.

அன்வர் அல் அவ்லாகி அமெரிக்காவில் கொலராடோ பல்கலைக்கழகத்தில் சிவில் எஞ்சினியரிங் படிப்பினை முடித்தவர். சான் டீகோவில் முதுகலை பட்டப்படிப்பை முடித்துடன் பின்னர் டாக்டர் பட்டம் பெறுவதற்காக வோஷிங்டன் சென்றார் . இவர் ஒருமுறை ஆப்கானிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செல்ல நேரிட்டதால், சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடன் கூட்டாளிகளுடன் தொடர்பு ஏற்பட்டது.


ஆங்கிலத்தை சரளமாக பேசும் திறமை பெற்றுள்ள இவர் தன்னுடைய போதனைகளில், பென்டகன் தாக்குதல் போல் அல்லாமல் சிறு சிறு தாக்குதல்களை அவ்வப்போது நடத்துங்கள். அப்போது தான் அதைப் பற்றிய பயம் மக்களிடையே நீடித்திருக்கும் என்று கூறி வருகிறார்.

தன்னுடைய நடவடிக்கைகளை பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் மட்டுமல்லாமல் ஏமன் மற்றும் கிழக்கு ஆபிரிக்கா ஆகிய நாடுகளுக்கும் பரப்பி வருகிறார்.

பின்லேடனை போல் அல்லாமல் ஆனால் மெல்ல தன் கொள்கைகளை இணையத் தளம் வழியாக பரவச்செய்து தீவிரவாதப் போக்கினை வலுப்படுத்தி வருவதால் இவரை உலகளாவிய பயங்கரவாதிகளில் ஒருவராக கடந்த ஏப்ரல்மாதம் அமெரிக்க புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏ. அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# பாகிஸ்தானின் வெள்ளநிவாரண பாதிப்புக்காக ரூ.92 கோடி நிதியுதவி அளித்தது இந்தியா



(நியூயோர்க்)

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தானுக்கு ரூ.92 கோடி நிதியுதவியை இந்தியா வழங்கியுள்ளது.

இதற்கான காசோலை இந்தியாவிலுள்ள சார்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான்-கி-மூனிடம் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியத் தூதர் ஹர்தீப் சிங் பூரி இதற்கான காசோலையை ஒப்படைத்தார்.

இது குறித்து பாக்-கி-மூன் கூறுகையில், பாகிஸ்தானில் மழை வெள்ளப் பாதிப்பு நிவாரணத்துக்கு பல நாடுகள் உதவி புரிய வந்ததைப் பாராட்டுகிறேன். அயல் நாடான இந்தியா பாகிஸ்தானுக்கு உதவியதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். பாகிஸ்தானில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இந்த நிதியுதவி மிகவும் உபயோகமானதாக இருக்கும் என்றார். இந்தியாவின் உதவியை பாகிஸ்தான் ஏற்றுக்கொள்ள மறுக்கவே ஐக்கிய நாடுகள் சபை மூலம் நிதியுதவி வழங்க முடிவு செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்குப் பின் ஹர்தீப் சிங் பூரி கூறுகையில், மழை, வெள்ளம் போன்ற இயற்கைப் பேரழிவுகள் ஏற்படும் போது அவைகளுக்கு நாட்டின் எல்லைகள் தெரியாது. இது பாகிஸ்தானுக்கு இந்தியா சார்பில் வழங்கப்பட்ட சிறிய நிதியுதவியாகும். பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் மக்களுக்கு ஆதரவாக இந்திய மக்கள் எப்போதும் இருப்பதாகவும் இவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய இந்தியா காத்திருக்கிறது.

இந்திய அரசின் உயர் அதிகாரிகள் எடுத்த முடிவின் படி இந்தத் தொகை இப்போது வழங்கப்பட்டுள்ளது என்றார். இதன்போது ஐக்கிய நாடுகள் சபைக்கான பாகிஸ்தான் தூதர் அப்துல்லா ஹூசைன் ஹாரூன் உடனிருந்தார்.

(ஸ்ரீ-2)

# ஆப்கானிஸ்தான் தேர்தலில் வன்முறை; 81 தலிபான்கள் பலியாகியுள்ளனர்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதில் பொது மக்கள் வாக்குப்பதிவு செய்யக்கூடாது என தலிபான் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்திருந்தனர்.மேலும் காபூல் மற்றும் குண்டுஷ் விமான நிலையங்களில் 22 ரொக்கெட் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர்.

மேலும் ஆங்காங்கே தாக்குதல் நடத்தினர். இருந்தும் மக்கள் துணிச்சலுடன் சென்று வாக்களித்தனர். 40 சதவீதத்துக்கும் மேல் வாக்குகள் பதிவானது. இருந்தும் ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் பீதி நிலவியது.

இந்நிலையில் ஆங்காங்கே பதுங்கியிருந்து வன்முறையில் ஈடுபட்ட தலிபான்களை ஆப்கான் மற்றும் பன்னாட்டு இராணுவ வீரர்கள் நேற்று முன்தினம் தீவிர வேட்டையாடினர். சயீத் கரம் மாவட்டத்தில் கும்பலாகப் பதுங்கியிருந்த தீவிரவாதிகள் மீது விமானத்தில் பறந்தபடியே துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதில் 71 பேர் பலியாகினர்.இந்தத் தகவலை அம்மாகாண செய்தி தொடர்பாளர் ஷபிகுல்லா முஜா ஹித் உறுதிசெய்தார். வடக்கு குண்டுஷ் மாகாணத்தில் உள்ள சார்தாரா, தஷ்த- இ- ஆர்சி மற்றும் அலியாபாத் மாவட்டங்களில் வன்முறையில் ஈடுபட்ட 18 தலிபான் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் இங்கு நடைபெற்ற தாக்குதலில் 2 இராணுவ வீரர்கள் உட்பட 6 பாதுகாப்புப் படை வீரர்கள் உயிரிழந்தனர்.

பாக்லான் மாகாணத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் பொதுமக்கள் 6 பேர் இறந்ததுடன் 22பேர் காயமடைந்தனர்.

(ஸ்ரீ-2)

## பாகிஸ்தானில் கோஷ்டி மோதலுக்கு 100 பேர் பலி

(பெஷாவர்)

பாகிஸ்தானில் குர்ரம் பகுதியானது மலைகள் நிறைந்த இடமாகும். இங்கு வாழ்பவர்கள் பழங்குடியின மக்கள் என கருதப்படுகின்றனர். அங்கு ஷலாஷன் மற்றும் ஷலோ தாங்கி என் இரு இன மக்களிடையே தொடர்ந்து மோதல் நடைபெற்று வருகிறது. இரு பிரிவினரும் ஒருவரை ஒருவர் பயங்கர அதி நவீன ஆயுதங்களால் தாக்கிக் கொள்கின்றனர்.

மேலும் அங்குள்ள 4 கிராமங்களில் வீடுகளும் தீ வைத்து கொளுத்தப்பட்டன. இது வரை நடந்த மோதலில் 100 பேர் பலியாகி உள்ளனர். பலர் காயம் அடைந்துள்ளனர். தொடர்ந்து மோதல் நடந்து வருகிறது.

(ஸ்ரீ-2)

# சூடானில் படகு கவிழ்ந்து 13 பேர் பலியாகியுள்ளனர்

பஸ் விபத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக சென்று கொண்டிருந்தவர்களை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததால் அதில் பயணம் செய்தவர்களில் 13 பேர் இறந்துள்ளதாக சூடான் நாட்டு அரசாங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த படகானது வெள்ளை நைல்நதியின் குறுக்காக 22 பேரை ஏற்றிச் சென்ற போது கவிழ்ந்து மூழ்கியுள்ளதாக பேச்சாளர் அப்துல் மஜீட் தெரிவித்துள்ளார். இதில் 13 பேர் நீரில் மூழ்கியுள்ளதுடன் 9 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இப்படகில் பயணித்தவர்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என்றும் கடந்த 17 ஆம் திகதி இரண்டு பஸ்கள் மோதி விபத்துக்குள்ளானதில் இறந்த 37 பேரின் மரணச் சடங்கிற்கு சென்றுகொண்டிருந்த போதே இவ்விபத்து ஏற்பட்டதாக பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

அப்படகு தலைநகர் கார்டோமிலிருந்து 60மைல் தெற்கிலுள்ள அல்டார்நகரில் மூழ்கியுள்ளதுடன் கார்டோமிற்கு அருகிலேயே மேற்படி பஸ் விபத்து இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.குறித்த பஸ் டிரக் வண்டியொன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது மினி பஸ் ஒன்றுடன் மோதி தீ விபத்துக்குள்ளானது. அதனால் 4 சிறுவர்கள் உட்பட 37 பேர் கொல்லப்பட்டனர்.

(ஸ்ரீ-2)




# அமெரிக்காவில் அணு இரகசியத்தை விற்ற விஞ்ஞானி தம்பதியினர் கைது



(லாஸ் அலமாஸ்)

ஆர்ஜென்டினாவைச் சேர்ந்தவர் பெட்ரோலியோனார்டோ மாஸ்செரோனி (வயது 75) ஆகும். இவரது மனைவி மார்ஜோரி ராஸ்பி மாஸ்சொரனி (வயது 67). இவர்கள் இருவரும் அணுவிஞ்ஞானிகள். அமெரிக்க குடியுரிமை பெற்றவர்கள். இவர்கள் அமெரிக்காவில் உள்ள லொஸ் அலமாஸ் நகரில் உள்ள தேசிய ஆய்வகம் ஒன்றில் பணிபுரிந்தனர்.

அப்போது, அணு ஆயுதங்கள் தயாரிக்க அவற்றின் இரகசியங்களை வெனிசுலா நாட்டுக்கு விற்றதாக புகார் கூறப்பட்டதன் காரணமாக அமெரிக்காவின் உளவுத் துறை (எம்.பி.ஐ.) அவர்களிடம் தீவிர விசாரணை ஒன்றை நடத்தியது.விசாரணையில் அது உண்மை என தெரியவந்தது.


இதைத் தொடர்ந்து அவர்கள் 2 பேரும் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் அல்புகொ ரோகுவில் உள்ள நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் மீது 22 குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டுள்ளதுடன், இவை நிரூபிக்கப்பட்டால் தம்பதிக்கு ஆயுள் தண்டனை வரை கிடைக்க வாய்ப்பு உள்ளது.

(ஸ்ரீ-2)

# போதை மருந்து கடத்தும் கும்பலுக்கு உதவிய கிளி



(நியூயோர்க்)


அமெரிக்க கண்டத்தில் உள்ள கொலம்பியாவில் போதை மருந்து கடத்தல் அதிக அளவில் உள்ளது. எனவே அந்த கும்பலை ஒடுக்கும் நடவடிக்கையில் அந்நாட்டு அரசு தீவிரமாக உள்ளது. பாரன்குயில்லா நகரில் ஒரு பங்களாவில் போதை மருந்து கடத்தல் கும்பல் பதுங்கியிருப்பதாக பொலிஸுக்குத் தகவல் கிடைத்ததை அடுத்து சுமார் 300 பொலிஸார் அந்த பங்களாவை சுற்றி வளைத்தனர்.

அப்போது அங்கு திடீரென ஒரு கிளி பறந்து வந்தது. வந்த வேகத்தில் ஓடு... ஓடு... உன்னைப் பிடிக்க பூனை வருகிறது என கொஞ்சி கொஞ்சிப் பேசியது.இதை கேட்ட போதை மருந்து கடத்தல் கும்பல் அங்கிருந்து தலை தெறிக்க தப்பி ஓடிவிட்டது.


இருந்தும் அவர்களில் சிலரை பொலிஸார் பிடித்தனர்.அவர்களிடம் நடத்திய விசாரணையில் பொலிஸார் வருவதை காட்டிக்கொடுக்க கிளியை வளர்த்து வருவதாகவும் அதற்கு லொரன்ஸ்ஷோ என பெயரிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

எனவே அந்த கிளியையும் பொலிஸார் பிடித்து விலங்குகள் நல மையத்தில் ஒப்படைத்தனர். இச் சம்பவம் அங்கு பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

(ஸ்ரீ-2)



யாழ்ப்பாணக் கல்விக் கண்காட்சி-2010 நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆரம்பமானது. இக் கண்காட்சியை சிறுகைத்தொழில் அபிவிருத்தி மற்றும் பாரம்பரிய தொழில்விருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடா வெட்டி ஆரம்பித்து வைப்பதையும் விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் கண்காட்சியில் பங்குபற்றிய உயர்கல்வி நிறுவனங்களின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.



# லயன்ஸ் அணி இலகு வெற்றி வாய்ப்பையிழந்தது ஹயானா

கமரூன்-பீற்றர்சன் ஜோடியின் அதிரடியில் லயன்ஸ் அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ஹயானா அணியை வீழ்த்தி யது.

இப் போட்டியில் தோல்வியடைந்த ஹயானா அணி அரையிறுதி வாய்ப்பையிழந்தது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் சம்பியன்ஸ் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று ஜோகனஸ்பேக்கில் நடைபெற்ற லீக் சுற்றின் 14-வது போட்டியின் பிரிவு பியைச் சேர்ந்த தென்னாபிரிக்காவின் லயன்ஸ் அணியும் மேற்கிந்தியத் தீவுகளின் ஹயானா அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற லயன்ஸ் அணித் தலைவர் பீற்றர்சன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஹயானா அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 148 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஜேக்கப்ஸ் 34 ஓட்டங்களையும் அணித் தலைவர் சர்வான் 21, கிறிஸ்ரியான் 19, கிராண்டான் 15 ஓட்டங்களையும் எடுத்த னர்.

பந்து வீச்சில் றில்லி 4 விக்கெட்டுக்களையும் பிரைலிங்க், அலெக்சாண்டர், பான்கிசோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய லயன்ஸ் அணி கமரூன்-பீற்றர்சன் ஜோடியின் அதிரடியில் 15.1 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 149 ஓட்டங்களைக் குவித்து 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் கமரூன் 42 பந்துகளில் (5பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் உட்பட) 78 ஓட்டங்களையும் அணித் தலைவர் பீற்றர்சன் 38 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 57 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் கிராண்டன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இவ் வெற்றியின் மூலம் லயன்ஸ் அணி தான் விளையாடிய மூன்றாவது போட்டியில் இரண்டாவது வெற்றியைப் பெற்றுத் தொடரில் 4 புள்ளிகளைப் பதிவு செய்தது.

இப் போட்டியில் தோல்வியடைந்த ஹயானா அணி தான் விளையாடி மூன்றாவது போட்டியிலும் தோல்வியடைந்து அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

# மூன்றாவது ஒரு நாள் போட்டியிலும் பாகிஸ்தான் வீரர்கள் சூதாட்டம்

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியிலும் பாகிஸ்தான் வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டது அம்பலமாகியுள்ளது. இது குறித்து முழு விசாரணை நடத்த ஐ.சி.சி. முடிபு செய்துள்ளது.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி லோர்ட்ஸ் டெஸ்டில் ஸ்பாட் பிக்சிங்கில் ஈடுபட்டனர். இதையடுத்து அணித் தலைவர் சல்மான் பட், முகமெட் ஆஸிப், முகமெட் அமீர் ஆகிய மூன்று வீரர்களைச் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) இடைநிறுத்தியது.

இந்நிலையில் இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகள் மோதிய மூன்றாவது ஒரு நாள் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை லண்டன் ஓவல் மைதானத்தில் நடந்தது.

இதில் 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது. ஆனால் இந்தப் போட்டியிலும் பாகிஸ்தான் அணி வீரர்கள் ஸ்பொட் பிக்ஸின் முறையில் சூதாட்டத்தில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளது.

இதனை இங்கிலாந்திலிருந்து வெளியாகும் தி சன் என்ற பத்திரிகை அம்பலப்படுத்தியுள்ளது. இது குறித்து அந்தப் பத்திரிகையில் வெளியான செய்தியில்,

இங்கிலாந்துடனான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் சூதாட்டம் நடந்துள்ளது. போட்டியின் முடிபை நிர்ணயிக்காமல் லோட்ஸ் டெஸ்ட் போன்று ஸ்பொட் பிக்ஸிங் முறையில் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதாவது பாகிஸ்தான் அணி துடுப்பாட்டம் செய்தபோது குறிப்பிட்ட இரண்டு ஓவர்களில் எத்தனை ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என ஏற்கெனவே முடிபு செய்யப்பட்டுள்ளது. இது தவிர ஒவ்வொரு 10 ஓவர்களின் முடிபின் போதும் எவ்வளவு ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என ரன் றேட்டையும் பிக்ஸிங் செய்துள்ளனர். இவ்வாறு போட்டியில் நடக்கும் விடயங்கள் அனைத்தும் முன்னதாகவே முகவர்களுக்கு தெரிந்துள்ளது. இந்தப் போட்டி எப்படிச் செல்ல வேண்டும் என்பதை இந்தியாவில் உள்ள சூதாட்டக்காரர்கள் பலர் இணைந்து நிழல் உலக முகவர்கள் மூலம் வழிநடத்தியுள்ளனர்.

# சுப்பர் ஓவரில் சென்னை கிங்ஸ் தோல்வி; விக்டோரியா அணி அரையிறுதிக்குள் நுழைவு

(போர்ட் எலிசபெத்)

சம்பியன்ஸ் லீக் தொடரின் பரபரப்பான லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, சுப்பர் ஓவர் முறையில் விக்டோரியா அணியிடம் தோல்வியடைந்தது.

தென்னாபிரிக்காவில் 2-வது சம்பியன்ஸ் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடர் நடக்கின்றது. இதில் நேற்று முன்தினம் போர்ட் எலிசபெத்தில் நடந்த ஏ பிரிவு லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் (இந்தியா), விக்டோரியா (அவுஸ்திரேலியா) அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் தோனி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார். இந்நிலையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு மைக்கல் ஹசி, முரளிவிஜய் நல்ல ஆரம்பம் கொடுத்தனர்.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 68 ஓட்டங்கள் சேர்த்தபோது மைக்கல் ஹசி 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சுரேஸ் ரெய்னா 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து நிலைக்கவில்லை.

மறுமுனையில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி முரளிவிஜய் 53 பந்து (4 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் உட்பட) 73 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித் தலைவர் தோனி 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். பின்னர் களமிறங்கிய அனிருதா (2), பத்திரிநாத் (1) உள்ளிட்ட நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்கத் தவறினர்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 162 ஓட்டங்கள் எடுத்தது. எட்டக்கூடிய இலக்கை விரட்டிய விக்டோரியா அணிக்கு பின்ச் அதிரடி ஆரம்பம் கொடுத்தார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் பந்து வீச்சை சிதறிடித்த இவர் 17 பந்தில் (3 சிக்ஸர், 4 பவுண்டரிகள் உட்பட) 41 ஓட்டங்கள் எடுத்து அஸ்வின் சுழலில் சிக்கினார். மற்றொரு ஆரம்ப வீரர் பிராட் ஹேறாட்ஜ் (06) ஏமாற்றினார்.

அடுத்து வந்த மத்யூவ் வாடே (31) பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மெக்டொனால் (0) வந்த வேகத்தில் நடையைக் கட்டினார்.

மறுமுனையில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அணித் தலைவர் டேவிற் ஹசி அரைச் சதம் அடித்தார். அடுத்து வந்த குய்னே (10), ஹாஸ்டிங்ஸ் (01) நிலைக்கவில்லை.

விக்டோரியா அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 12 ஓட்டங்கள் தேவைப்பட்டது. கடைசி ஓவரை ரெய்னா வீசினார். இதன் முதல் பந்தில் சிக்ஸர் அடித்த மெக்மே (10) அடுத்த பந்தில் ஆட்டமிழந்தார்.

பின்னர் 3-வது பந்தை எதிர்கொண்ட நான்ஸ் டக் அவுட் ஆனார். 4-வது பந்தில் பீற்றர் சிடில் பவுண்டரி அடிக்க 2 பந்தில் 2 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

5-வது பந்தில் சிடில் ஒரு ஓட்டம் எடுத்தார். 6-வது பந்தில் மெக்கெய்ன் (0) ரன் அவுட் ஆனார். இதனால் விக்டோரியா அணி 20 ஓவரில் 162 ஓட்டங்களுக்கு ஒரு ஓட்டத்தை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழக்க போட்டி சமநிலை ஆனாது.

இதனால் போட்டியின் முடிபு சுப்பர் ஓவர் முறைக்குச் சென்றது. அஸ்வின் வீசிய சுப்பர் ஓவரில் விக்டோரியா அணியின் டேவிற் ஹசி 3 சிக்ஸர் உட்பட 22 ஓட்டங்கள் எடுத்தார்.

பின்ச் ஒரு ஓட்டம் எடுக்க விக்டோரியா அணி சுப்பர் ஓவரில் 23 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் 24 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் சென்னை அணி சுப்பர் ஓவரை ஆரம்பித்தது.

மெக்கே வீசிய முதல் இரண்டு பந்தில் ரென்யா, முரளிவிஜய் தலா ஒரு ஓட்டம் எடுத்தனர். மூன்றாவது பந்தில் ரெய்னா 2 ஓட்டங்கள் எடுத்தார்.

பின்னர் 4-வது பந்தில் ரெய்னா சிக்ஸர் அடிக்க 2 பந்தில் 14 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 5-வது பந்தில் இரண்டு ஓட்டங்கள் எடுத்த ரெய்னா கடைசிப் பந்தில் ஒரு ஓட்டம் மட்டுமே எடுத்தார்.

இதனால் விக்டோரியா அணி சுப்பர் ஓவர் முறையில் வெற்றி பெற்றது. இவ்வெற்றியின் மூலம் விக்டோரியா அணி தான்விளையாடிய மூன்றாவது போட்டியிலும் வெற்றி பெற்றுத் தொடரின் 6 புள்ளிகளைப் பதிவு செய்து பிரிவு ஏ யில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

# யாழ். நகர்ப் பகுதி உணவகங்கள் மீது சுகாதாரப் பிரிவு அதிரடி சோதனை

## 7 கடைகளுக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் அமைந்துள்ள உணவு தயாரிக்கும் நிலையங்கள் மற்றும் உணவகங்களில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையில் பாவனைக்குதவாத காலாவதியான ஒரு தொகை உணவுப்பொருள்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

யாழ்.மாநகராட்சி மன்ற முதல்வர் திருமதி யோ.பற்குணராசா, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் அபேய சிங்க பண்டார மற்றும் யாழ். பொலிஸ் நிலைய சுற்றாடல் பாதுகாப்பு பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் பொறுப்பதிகாரி கே.எம்.ஏ.கே.கோணார ஆகியோரின் பணிப்பின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற பொது சுகாதார பரிசோதகரும் உணவுப் பரிசோதகருமான ஆ.ஜீவநாதன் தலைமையில் பொதுசுகாதார பரிசோதகர் பி.ஆறுமுகதாஸன், எஸ்.முகுந்தன், என்.இரகுமார், எம்.விஜயகுமார், ஜே.பேடினான்ஸ், சி.பி.கிஷோகுமார், ஏ.பகீதரன் ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்த திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர்.

இத் திடீர் பரிசோதனையில் மொத்தமாக 91 நிலையங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. இவற்றில் 19 நிலையங்களில் திருப்திகரமற்ற நிலை காணப்பட்டது. மேலும் 7 நிலையங்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ந-3)

## தலைமன்னார்–இராமேஸ்வரம் கப்பல் சேவை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை

(மன்னார்)

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்குமிடையிலான கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு அரசாங்கத்திடம் கிழக்கு மாகாண சபை கோரிக்கை விடுத்துள்ளது.

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான படகு சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு அரசாங்கத்திடம் கிழக்கு மாகாண சபை வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமா லெப்பை கோரிக்கை விடுத்தார்.

நாட்டில் தற்போது சமாதான சூழ்நிலை நிலவி வருகின்ற நிலையில் சுற்றுலா பயணிகளுக்கும் வடக்குக் கிழக்கு உட்பட இலங்கைக்கு வருகின்ற வர்த்தகர்களுக்கும் மேற்படி கப்பல் சேவை பாரிய உதவியாக இருக்கும் என கிழக்கு மாகாண சபை தெரிவித்துள்ளது. (ந-5)

## புகைத்தல் மதுபாவனையைக் கட்டுப்படுத்த நிழல் அதிகார சபை

(கொழும்பு)

புகைத்தல் மற்றும் மதுபாவனையை கட்டுப்படுத்துவதில் தேசிய புகையிலை மற்றும் அற்ககோல் அதிகார சபைக்கு உதவுமுகமாக ஏனைய 26 அமைப்புக்களுடன் இணைந்து நிழல் அதிகார சபை அமைக்கப்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரான வண. ஓமல்பே சோபித தேரர் இந்த நிழல் அதிகார சபைக்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டில் இந் நாட்டை போதை மற்றும் மது அற்ற நாடாக்க வேண்டும் என்ற மகிந்த சிந்தனையின் இலக்கை அடைவதற்கு தேசிய புகையிலை மற்றும் மதுசார அதிகார சபை தற்போது செயற்படும் முறை போதுமானதல்ல என வண. ஓமல்பே சோபித தேரர் கூறியுள்ளார். (ந-5)

## லக்ஷர் ஈ தொய்பாவுக்...

சம்பந்தப்பட்டிருக்கலாம் எனவும் சில ஊடகங்கள் ஊகம் தெரிவித் தன.

ஆனால் ஹிமாயத் பெய்க்கிற்கு பயிற்சியளிக்கப் பட்டதில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எந்தவித தொடர்பும் இல்லை என மகாராஷ்டிரா மாநில பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவின் தலைவர் ராகேஸ்மரியா இந்துப் பத்திரிகையிடம் தெரிவித்தார்.

பெய்க் கொழும்பில் பயிற்சி பெற்றதாக கூறியுள்ள போதிலும் இலங்கையின் உள்ளூர் அமைப்புக்கள் எதற்கும் இப் பயிற்சியில் தொடர்பில்லை என மஹாராஷ்டிரா மாநில பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு கூறிவருகிறது.

இதற்காக கொழும்பை தெரிவுசெய்ததில் இரு காரணங்களே உள்ளன. வந்து இறங்கிய பின் விசா பெற முடியும் என்பதால் அந் நாட்டுக்குச் செல்வது இலகுவானது. மற்ற காரணம் சந்தேகப்படுவது குறைவு என பெய்க் கைது செய்யப்பட்டவுடன் மரியா தெரிவித்திருந்தார்.

2008 மார்ச்சில் இலங்கைக்கு வந்த பெய்க்கிற்கு குண்டு தயாரித்தல் முதலானவற்றில் 15 நாள் பயிற்சி வழக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தியாவிற்குள் நுழைவதற்காக லஷ்கர் ஈ தொய்பாவின் 200 அங்கத்தவர்கள் காத்திருப்பதாக இந்தியப் புலனாய்வுத் துறைக்கு அமெரிக்கா தகவல் வழங்கியுள்ளதாக எம்.எஸ்.என். இந்தியா எனும் ஊடகம் தெரிவித்திருந்தது. (5)

## இலங்கை...

உயர்அதிகாரி இந்தியா அரசாங்கத்திற்கு வழங்கிய விளக்கத்தை அடுத்து இந்தியாவின் இக் கோரிக்கை பான் கீ மூனிடம் விடுக்கப்பட்டது. (ந-5)

## யாழ்ப்பாண...

தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பவுள்ளதாக எஸ்.சத்யேந்திரா தெரிவித்தார். (ந-5)

## யாழ்.மாவட்ட மருந்தகங்களில் மருந்தாளர்கள் நியமிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல மருந்தகங்களிலும் எதிர்வரும் ஜனவரி முதல் மருந்தாளர்களை கடமைக்கு அமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிறுகைத் தொழில் அபிவிருத்தி மற்றும் பாரம்பரிய தொழில் விருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த நடைமுறையை பின்பற்றாத மருந்தகங்களின் அனுமதிப்பத்திரத்தை ரத்து செய்யுமாறும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற பாவனையாளர் பாதுகாப்பு, மரங்களைக் கொண்டு செல்வதற்கான அனுமதி தொடர்பான கலந்துரையாடலிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தனியார் மருந்தகங்களின் பதிவு மற்றும் விலை தொடர்பான நடைமுறைகள் தொடர்பில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் விபரித்தார்.

இதன்போது யாழ்ப்பாண தனியார் மருந்தகங்களில் (பாமசி) மருந்தாளர் பற்றாக்குறை நிலவுவதாகவும் மருந்தாளருக்குரிய அடிப்படைச் சம்பளம் வழங்கப்படுவதில்லை எனவும் சகல மருந்தகங்களிலும் மருந்தாளர்கள் கடமைக்கு அமர்த்தப்படல் அவசியமானது என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் சுட்டிக்காட்டினார்.

யாழ்.மாவட்டத்தில் சகல மருந்தகங்களிலும் எதிர்வரும் ஜனவரிமாதம் முதல் மருந்தாளர்களை கடமைக்குமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலோசனை வழங்கினார்.

எனவே பதிவு செய்யப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் வழங்கப்படும் வெளிவாரி மருந்தாளர்கற்கை நெறிமூலம் பயிற்றுவிக்கப்படுபவர்களுக்கு சுகாதார அமைச்சின் மருந்தாளர் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதாக தெரிவித்த யாழ்.பிராந்திய சேவைகள் பணிப்பாளர் மருந்தகங்களின் உரிமையாளர்களை ஒன்று கூட்டி மருந்தாளர்களின் அடிப்படை சம்பளத்தை தீர்மானிப்பதாகவும் குறிப்பிட்டார். (ந-5)

## சரணடைந்த எனது மகள்...

இங்கு சாட்சியமளித்த 58 வயதான கந்தசாமி பொன்னம்மா என்ற தாய் இறுதிப் போரின்போது இராணுவத்திடம் சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினராகிய தனது மருமகனும் தனது மகளும் அவர்களது இரண்டு குழந்தைகளும் காணாமல் போயுள்ளதாக கூறினார்.

அத்துடன் மல்லாவி பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தில் பணியாற்றிய தனது மகன் ஒருவர் 2006ஆம் ஆண்டு வவுனியாவுக்கு சென்றிருந்தபோது காணாமல் போனதாகவும் அந்தத்தாய் தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என கண்டாவளையைச் சேர்ந்த காசிப்பிள்ளை பா[illegible] வரன் என்பவர் ஆணைக்குழுவினரிடம் [illegible]யுறுத்தியுள்ளார்.

பார்வை இழந்துள்ள இவர் போரினால் பாதிக்கப்பட்டு உடல் வலுவிழந்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இன்று முல்லைத்தீவு நகருக்குச் சென்று அந்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்களின் சாட்சியங்களை பதிவுசெய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## ஐ.நாவில் உரையாற்றும்...

போதே ஜனாதிபதி நிபுணர் குழுவுக்கு எதிரான தமது நிலைப்பாட்டை வெளியிடுவார் என அமைச்சர் குறிப் பிட்டுள்ளார்.

இடம் பெயர்ந்த 3 இலட்சம் மக்களை 16 மாதங்களுக்குள் மீள்குடியேற்றியதன் அடிப்படையில் எந்த நாடும் இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் தொடர்பில் கேள்விகளை எழுப்பாது என்றே தாம் நம்புவதாகவும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சாட்சியமளிக்க முன் வந்திருப்பது சிறந்த முன்னேற்றம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## சரத்...

இந் நிலையில் பொன்சேகாவின் பிரதிநிதியாக அவ்விசாரணையின் போதுதான் ஆஜராகுவதாக ஜயலத் எம்.பி.ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (ந-5)

## 19-வது...

தொகுதிவாரியாகவும் 70 பேர் விகிதாசார முறையிலும் 15 பேர் தேசியப் பட்டியல் அல்லது மாகாண அடிப்படையிலும் தெரிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திருத்தங்கள் அனைத்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு வாய்ப்பாகவே கொண்டுவரப்படவுள்ளதாக அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை 19 ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நான்கு பேர் கொண்ட குழு ஒன்றை அமைக்கவுள்ளார்.

எனினும் இந்தக்குழுவில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ அல்லது ரவூப் ஹக்கீமோ இடம்பெறமாட்டார்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந-5)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கோவிந்தராஜா (கோபால்)



இந்தியாவைப் பிறப்பிடமாகவும் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கோவிந்தராஜா (19.09.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், ஆனந்தி, சிவகுமார், சுரேஸ்குமார் (வலம்புரிப் பணியாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.09.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
சுரேஸ்குமார் (மகன்)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்றுமுதல் ...

HNB சங்கானை கிளையின்

முகாமையாளராக கடமையேற்கும்

மகேசன் தயாகரனுக்கு

(B.Sc in Agri,MBA)

எமது மனமார்ந்த வாழ்த்து

- நண்பர்கள்

(சி-1233)





ஆசிரியர் வே.அன்பழகன் அவர்களின்

தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சை – 2011
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணத்தில்
அன்பொளி கல்வியகம்
யாழ்.இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்
அன்பொளி கல்விநிலையம்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

அனுமதிகளை 20.09.2010 திங்கட்கிழமையிலிருந்து 26.09.2010 ஞாயிற்றுக்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு : பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

சின்ன விழி அசைத்துச் சிரித்து வரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டுவோம்.

(C-1236) இயக்குநர்கள்.



CIMA-UK UNTIL NOW 100% PASS

Mega Schol.

MCS

High qualified, well experienced lecture panel with TOP CIMA holders

12000/= 2000/=

Supported By UNDP/JRRP

SMS your name & course to 0772 395 895

324,Palaly Road,Parameswara Junction

Free : ICDL, Toefl-English


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.